வானவில்

VAANAVIL

இதழ் 158 மாசி 2024

ISSUE 158 FEBRUARY 2024

# சுதந்திரம் யாருக்காக?



இலங்கை தனது 76 ஆவது சுதந்திர தினத்தை வழமைபோல பெப்ருவரி 4 ஆம் திகதி கொண்டாடியது. இதற்காக அரசாங்கம் ஏற்பாடு செய்த நிகழ்வுகள் (பிரதானமாக முப்படைகளின் அணிவகுப்பு) கொழும்பு காலிமுகத் திடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றன.

அரசாங்கம் ஆடம்பரமாக சுதந்திர தின நிகழ்வுகளை முன்னெடுத்திருந்தாலும், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இந்த நிகழ்வைக் கொண்டாடுவதில் ஆர்வமாக இருக்கவில்லை. அத்துடன் வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மையினரான தமிழர்களில் ஒரு பகுதியினர் வழமைபோல இந்த சுதந்திர தினத்தை தமது உரிமைகள் பறிக்கப்பட்ட கறுப்பு நாளாகப் பிரகடனம் செய்து துக்கம் அனுட்டித்தனர்.

இலங்கை சுமார் 400 ஆண்டு காலம் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்தது. போர்த்துக்கேயர் (1505 – 1658), ஒல்லாந்தரைத் (1658 – 1796) தொடர்ந்து பிரித்தானியர் இறுதியாக (1815 – 1948) இலங்கையை ஆட்சி செய்தனர். அவர்களே இலங்கையை அதிக காலம் ஆட்சி செய்த அந்நிய காலனித்துவவாதிகள் ஆவர். அவர்கள் தமது நேரடி காலனித்துவ ஆட்சியைக் கைவிட்டுச் சென்ற 1948 பெப்ருவரி 04 ஆம் திகதியையே இலங்கை தனது சுதந்திர தினமாகக் கொண்டாடி வருகிறது.

ஆனால் பிரித்தானியர் 1948 இல் நாட்டை விட்டு வெளியேறினாலும் இந்தச் சுதந்திரம் பெயரளவினதாகவே இருந்தது. அவர்களது அரசியல் – பொருளாதாரப் பிடி தொடர்ந்தும் இலங்கையில் வலுவானதாகவே இருந்தது. அதனால்தான் இலங்கைத் தேசிய முதலாளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி 1956 இல் முதன்முதலாக ஆட்சிக்கு வந்ததும் பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுத்தது.

அவரது இந்த தீவிர ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகள் காரணமாக 1959 இல் அவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் அக்கட்சியின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் தெரிவான அவரது மனைவி சிறீமாவோ பண்டாரநாயக்க தனது கணவரின் ஏகாதிபத்திய விரோதக் கொள்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். அவர்கள் இருவரினதும் ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளுக்கு இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவளித்தன.

இந்த நடவடிக்கைகளின் உச்சமாக திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்க பிரதமராக இருந்தபோது, இடதுசாரிக் கட்சிகளின் உதவியுடன் 1972 இல் குடியரசு அரசியல் யாப்பொன்றைப் புதிதாகக் கொண்டு வந்து பிரித்தானிய முடியரசுடன் இருந்த இறுதித் தொடர்பையும் துண்டித்தார்.

இவ்வாறு 1956 முதல் பல ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுத்து வந்தபோதும், இலங்கை எதிர்நோக்கிய அடிப்படைப் பிரச்சினைகள் எதையும் தீர்த்து வைக்க முடியவில்லை. அதாவது நாட்டின் பிரதான பிரச்சினைகளான பொருளாதாரத்தில் தன்னிறைவு (விவசாயம் – கைத்தொழில் உட்பட), வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குதல், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துதல், சிறந்த கல்வி – சுகாதார – போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல், சிறுபான்மை இனங்களின் குறைபாடுகளைப் போக்குதல் என்பனவற்றுக்குத் தீர்வுகாண முடியவில்லை.

அதற்குக் காரணம், ஆட்சி அதிகாரம் வெள்ளையின அந்நியர்களின் கரங்களில் இருந்து கறுப்பு நிற சுதேசிகளின்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# கண்களுக்கு விருந்தாகும் நிகழ்வுகள் கலை நிகழ்ச்சிகளாகிவிட முடியுமா?

சென்ற இதழில் 'வெற்றிகரமாக 14வது ஆண்டில் வானவில்' என்று தலைப்பிட்டு தமிழில் வாசிப்புத்திறன் குறைந்து வருவது தொடர்பாக நாங்கள் எழுதிய குறிப்புகளை வாசித்த சிலர், இலங்கைத் தமிழர்களிடையேதான் வாசிப்புத்திறன் குறைந்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் புத்தகங்களின் எண்ணிக்கைகளையும், வருடாவருடம் (இவ்வருடம் ஜனவரி 5 முதல் 21ந் திகதி வரை நடந்தது) சென்னையில் நடக்கும் புத்தகக்கண்காட்சிக்கு வருகை தந்தவர்களையும் சுட்டிக்காட்டி, இலங்கைத் தமிழர்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் வாசிப்பு மீதான அக்கறை என்பது சீராக உள்ளதாகவே அவர்கள் மேலும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்விக்கு வாசிப்பு என்பது மிகவும் அத்தியாவசியமானது. துறைசார்ந்த கல்விக்கு அப்பால், ஓய்வு நேரங்களில் வாசிப்பு என்பதை இயல்பாக்கியும் கொள்ளலாம். இவ்வாறான வாசிப்பு என்பது வெறும் பொழுதுபோக்கிற்கானது என்பதற்கும் அப்பால், அறிவுத்தேடல் என்பதும் அதனுள் அடங்கியுள்ளது. அத்தோடு அரசியல், சமூகம், பொருளாதாரம், விஞ்ஞானம், மெய்யியல், கலை, இலக்கியம் என வாசிப்பதற்கு பலதரப்பட்ட விடயங்கள் உள்ளன. அதாவது அவரவருக்கு ஆர்வமான துறைகளில், அவரவர் மொழிகளில் படிப்பதற்கு உலகில் நிறைய விடயங்கள் உள்ளன.

ஆனால் பொழுதுபோக்கு என்பதை மாத்திரம் முன்னிறுத்தி கண்களுக்கும் எண்ணங்களுக்கும் விருந்தாக முழுக்க, முழுக்க வியாபார நோக்குடன் தயாரிக்கப்படும் படைப்புகளுக்கும் நிகழ்சிகளுக்கும் பின்னாலேயே பெருந்திரளான மக்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனைத்தான் நாங்கள் கடந்த பெப்ரவரி 9ந் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் கண்டோம். ஏழு இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் வாழும் ஒரு நிலப்பரப்பில், ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் முண்டியடித்துக் கொண்டு பொழுபோக்கு நிகழ்ச்சியொன்றினை பார்க்க விழைந்ததை வெறுமனே அவரவர் சுதந்திரமென்று கடந்து போய்விட முடியாது.

யாழ் குடாநாட்டை பூர்வீகமாக் கொண்டு, கனடா நாட்டில் வாழும் ஒருவர் NOTHERN UNI என்ற பெயரில் தனியார் பல்கலைக்கழகம் (அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களுக்காக உருவாக்கப்பட்டது) ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நிறுவியுள்ளார். இப்பல்கலைக்கழகத்தின் நிதியுதவிக்காக (மாணவர்களிடம் கிட்டத்தட்ட வருடம் 6 இலட்சம் அறவிடப்படுகின்றது. 4 வருடப்படிப்புக்கு 24 இலட்சம். அதாவது பணம் படைத்தவர்கள் மாத்திரமே இங்கு கற்கலாம்) என அறிவிக்கப்பட்டு, சென்னை சினிமாத்துறை சார்ந்த பாடகர்கள், நடிகர்கள், நடிகைகள் மற்றும் அரங்க அறிவிப்பாளர்களை வரவழைத்து, யாழ் முற்றவெளி திறந்தவெளி அரங்கில் நிகழ்ச்சியொன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியினை இலவசமாகக் கண்டுகளிக்க விரும்புவர்களுக்கும் மேடையிலிருந்து மிகத்தூரத்தில் வேலிபோட்டு இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. ஏற்கனவே ரிக்கற் வாங்கிய பார்வையாளர்களுக்கே அரங்கில் இடம் போதாத நிலையிருந்தது. அவ்வாறான நிலைமையில் இலவசப் பார்வையாளர்கள் வேலியை தகர்த்துக் கொண்டு மேடைக்கருகில் வந்ததால் களேபரமான நிலை உருவாகியது. உயிர்ப்பலிகள் எதுவுமின்றி நிகழ்ச்சி முடிவுற்ற போதிலும், இச்சம்பவமானது யாழ் சமூகத்தின் தற்போதைய மனோநிலை தொடர்பாக பலத்த வாதப்பிரதிவாதங்களை சமூக ஊடகங்களில் எழுப்பிச் சென்றுள்ளது.

சினிமா, பொழுபோக்கு அம்சத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் ஒரு சாதனம். சிறந்த கலையம்சம் கொண்ட சினிமா என்பது பொழுதுபோக்காளர்களிடையே பொதுவாக வரவேற்பை பெறுவதில்லை. இதனால் வியாபார நோக்கில் வெற்றியடைய வேண்டுமென்ற நோக்கத்தில், பெருந்திரளான மக்களை சென்றடைவதற்காக சினிமாத்துறை பல உத்திகளை கையாள வேண்டியுள்ளது. இதில் பெரிய பிழையொன்றும் கிடையாது. ஆகவே சினிமா என்பது வியாபாரம் – பொழுதுபோக்கு என்று அப்படியே விட்டுவிட வேண்டியதுதானே. ஆனால் உலகில், குறிப்பாக இந்தியாவில் அப்படியான நிலைமையில்லை.

சினிமாத்துறை சார்ந்தவர்களைப் பூஜிப்பதில் இந்தியாதான் உலகில் முன்னணி வகிக்கும் நாடு என்று கூறலாம். இதனைப் பாவித்து சினிமா நட்சத்திரங்கள் இந்தியாவில் அரசியலில் இலகுவாக நுழைந்து விடுகிறார்கள். இது ஒருபுறமிருக்க. இலங்கைத் தமிழர்களும் சென்னை சினிமாவின் பாதிப்பில் சினிமாவில் பிரபல்யமான நபர்களை மற்றும் பாடகர்களை தங்கள் 'ஹீரோ'க்களாகவே வழிபடும் போக்கு நீண்டகாலமாகவே உள்ளது. அதனால் அவர்களை இலங்கைக்கு வரவழைத்து மாலைகள் அணிவித்து ஊர்வலம் போனார்கள், கோவில் திருவிழாக்களில் மற்றும் பொது அரங்குகளில் நிகழ்ச்சிகள் நடத்தினார்கள்.

இப்போது இலங்கைத்தமிழர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்த பின்னர், இது பெரிய வியாபாரமாக மாறியுள்ளது. பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சினிமா நடிகர்களை மற்றும் பாடகர்களை வரவழைத்து, ரிக்கற்றுகளுக்கு மக்களிடம் பெருந்தொகைப் பணத்தை அறவிட்டு, நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துபவர்களும் கலைஞர்களும் பெருந்தொகை பணம் சம்பாதிக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாகவே சென்னை சினிமா நட்சத்திரங்கள் அடிக்கடி கொழும்புக்கும், சென்னை–யாழ் விமான சேவையைத் தொடர்ந்து, நேரடியாக யாழிற்கும் விஜயம் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

பெப்ரவரி 9ந் திகதி நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த பிரபல்யமான நடிகையுடன் புகைப்படம் எடுப்பதற்கு கட்டணம் 30000 ரூபா (ஏறத்தாழ 100 அமெரிக்க டொலர்) என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பின் பின்னணியில் இரு விடயங்கள் புலப்படுகின்றது. ஒன்று, இவ்வளவு பணம் கொடுத்து நடிகையுடன் புகைப்படம் எடுக்கத் தயாராக அங்கு மக்கள் உள்ளார்கள். மற்றது, பணம் சம்பாதிப்பதற்கு யாழின் சராசரி பொருளாதார நிலைமை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.


பணம் சம்பாதிப்பதற்கு அப்பால், இந்நிகழ்ச்சிகளை தமிழர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளாக விளம்பரப்படுத்தி, நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துபவர்கள், கலைஞர்கள் மற்றும் பார்வையாளர்கள் தங்களை தமிழ் தேசியப் பற்றாளர்களாகவும் காட்ட முனைகிறார்கள். இந்தப்பற்றே பித்தாக உருவெடுத்து வன்முறை வடிவம் எடுக்கின்றது. அதனால் இவ்வாறான நிகழ்வுகள் இறுதியில் கலாச்சாரச் சீரழிவிற்கே இட்டுச் செல்லும் ஆபத்தைக் கொண்டிருக்கின்றன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com
*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.*

# விஜேவீர முதல் அனுரகுமார திஸநாயக்க வரை – மாறும் ஜேவிபியின் முகங்கள்!




**தே**ர்தல் காய்ச்சல் ஆரம்பித்துவிட்டது. தென்னிலங்கையில் 70 சத வீதத்துக்கு மேற்பட்டவர்களினதும், நாட்டின் பெரிய சிறுபான்மை வாழும் வட மாகாணத்தில் உள்ளவர்களினதும் சூடான விடயமாக அது இருக்கிறது. தென்னிலங்கையைப் பொறுத்தவரை மூன்று அரசியல் கட்சிகள் – தேசிய மக்கள் சக்தி (இது ஜே.வி.பி அமைப்பை மையமாகக் கொண்டு தனிநபர்களையும் அமைப்புகளையும் இணைத்து அமைக்கப்பட்ட கூட்டமைப்பு), சமகி ஜன பலவேகய (ஐக்கிய மக்கள் சக்தி), ஐக்கிய தேசியக் கட்சி – என்பன எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான தமது வேட்பாளர்களை அறிவித்துள்ளன.

ஜே.வி.பி. கூட்டணியின் வேட்பாளராக அனுரகுமார திஸநாயக்கவும், சமகி ஜன பலவேகயவின் வேட்பாளராக சஜித் பிரேமதாசவும், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அந்தக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் சிறீலங்கா பொதுஜன பெரமுனவும் தமது சொந்த வேட்பாளர்களை நிறுத்தாத போதும், ஐக்கிய தேசியக் கட்சி அலலது சமகி ஜன பலவேகய என்பனவற்றின் வேட்பாளர்களை ஆதரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வட மாகாணத்தில் உள்ள அரசியல் குழுக்களைப் பொறுத்தவரை தேர்தலைப் புறக்கணிப்பதா அல்லது பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவதா என்ற கருத்து வேறுபாடு நிலவுகிறது.

சமகி ஜன பலவேகய புதியதொரு அரசியல் கட்சியாக இருப்பினும் சுதந்திரத்துக்குப் பின்னர் நாட்டை ஆட்சி செய்த ஊழல் அரசியல் குழுக்களின் கூட்டணியாக உள்ளது.

ஜே.வி.பி. தலைமையிலான இடதுசாரி அணியான தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் அதிகாரத்தில் இருந்தது கிடையாது. அதனால் அது ஊழலைக் கூட்டித்தள்ளும் துடைப்பத்தைக் கொண்ட ஒரு கட்சி என்று அர்த்தமாகிவிடாது. ஆனால் விஜேவீர தலைமையிலான ஜே.வி.பி. 1971 இல் நடைபெற்ற ஆயுதக் கிளர்ச்சிக்கு பொறுப்பான கட்சியாகும்.

இந்தக் காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கம் எனக் கூறப்படும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களை “இந்தியாவின் ஐந்தாம் படை” என ஜே.வி.பி. வர்ணித்ததுடன், அதன் காரணமாக அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் எனவும் பிரச்சாரம் செய்தது.

அந்தக் காலகட்டத்தில் நாடு எதிர்நோக்கிய உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஜே.வி.பி. முன்வைத்த ஆலோசனை சிறுபிள்ளைத்தனமானது. தேயிலைத் தோட்டங்களை அழித்துவிட்டு அந்த இடத்தில் உருளைக்கிழங்கைப் பயிரிட்டு உணவுத் தட்டுப்பாட்டை நீக்க வேண்டும் என விஜேவீர கூறினார்.

நல்ல வேளையாக அவர்களது ஆயுதக் கிளர்ச்சி தோல்வியில் முடிந்தது. அவர்கள் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் கொண்டு, நன்கு இராணுவப் பயிற்சியையும் தானியங்கி ஆயுதங்களையும் கொண்டிருந்த அரச படைகளைத் தூக்கியெறிய முயற்சித்தனர்.

துரதிஸ்டவசமாக இந்த அமைப்பு தமது தோல்வியடைந்த கிளர்ச்சியிலிருந்து எந்தவித பாடங்களையும் கற்றுக் கொள்ளாமல் 1988 – 89 காலகட்டத்தில் இன்னொரு காட்டுமிராண்டித்தனமான கிளர்ச்சியில் ஈடுபட்டது. அவர்களது இரண்டாவது கிளர்ச்சி கொடூரமானது. இவர்கள் தாம் பின்பற்றுவதாகச் சொன்ன மார்க்ஸ் மற்றும் லெனின் போதனைகளையோ, அவர்கள் மனித வாழ்வின் முக்கியத்துவம் பற்றி சொன்ன கருத்துக்களையோ பின்பற்றவில்லை. அவர்கள் ‘வெகுஜனங்களை’ தமது அடிமைகளாக நடத்தியதுடன், தம்மை எதிர்த்தவர்களை கொடூரமாகக் கொலையும் செய்தனர்.

அவர்களது அமைப்பு வடக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை மிகக் குறைந்தளவே அறிந்தவர்களாகவும் அங்கீகரிப்பவர்களாகவும் இருந்ததுடன், அங்கு இருந்த தீவிரவாதக் குழுக்களை ‘தமிழ் பயங்கரவாதிகள்’ என்றும் அழைத்தனர்! அதன் விளைவாக பெரும் எண்ணிக்கையான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதுடன், இன்றுவரை தொடரும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, சமூகம் கொடூரமயப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பயங்கரமான நாட்களைத் தொடர்ந்து நீண்ட பயணத்தின் மூலமே இன்றைய ஜே.வி.பி. – தேசிய மக்கள் சக்தி அமைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

தெரிவித்து ஜே.வி.பி. மேற்கொண்ட இரண்டாவது ஆயுதக் கிளர்ச்சி நிலைப்பாடு தற்போது மாற்றமடைந்துள்ளதாகத் தெரிகின்றது.

2022 யூன் மாதம் தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய தலைவர் (அனுரகுமார திஸநாயக்க) 'டெயிலி மிரர்' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில்,

'மாகாண சபைகள் அமைப்பு இப்பொழுது அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ளது. மாகாண சபைகள் அமைப்புமுறை தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலும், நிர்வாக ரீதியாகவும் தோல்வி கண்டுள்ளது. ஆனால் மக்கள் அது தமது உரிமை என்று கருதினால் மாகாண சபைகள் அமைப்புமுறை நீடிக்கலாம்' என்று கூறினார்.

ஆனால் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஹந்துநெத்தி 2023 பெப்ருவரியில், தமது கட்சி அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறினார். அத்துடன் அவர், தேசிய மக்கள் சக்தி இந்தத் திருத்தம் நீடிப்பதை ஏற்கவில்லை என்றும், இந்தச் சட்ட மூலத்தை ஜே.வி.பி. கடுமையாக எதிர்ப்பதாகவும் கூறினார்.

அரசாங்கம் கடன் மறுசீரமைப்பு சம்பந்தமாக சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கை சம்பந்தமாகவும் ஜே.வி.பி – தேசிய மக்கள் சக்தி என்பன இதே நிலைப்பாட்டிலேயே உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க முன்னணியில் உள்ளதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் கருத்துக் கணிப்புகள் வாக்குகளாக மாறுவதில்லை. தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. என்பனவற்றுக்குத் தேவையானது நேரத்துக்கு நேரம் தமது நிலைப்பாடுகளை மாற்றுவதை நிறுத்துவதே.

மக்கள் 2022 இல் நிலவிய அராஜக நிலையை மறந்து விடவில்லை. அத்துடன் அவர்கள் கடைகளில் மீண்டும் அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வந்ததுடன், நாட்டில் நிலவிய அராஜக நிலையை அகற்றி அமைதி நிலையையும் கொண்டு வந்த மனிதர் மீது நன்றியுணர்வையும் நினைவில் கொண்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் பரிசோதிக்கப்படாத, நிச்சயமற்ற ஒன்றுக்காக, ஏற்கெனவே தம் கைவசம் உள்ளதை நிராகரிப்பதற்கு விரும்பவும் மாட்டார்கள்.

(2024 ஜனவரி 27 ஆம் திகதி 'டெயிலி மிரர்' பத்திரிகையில் வெளிவந்த ஆசரியர் தலையங்கத்தின் சாரம்சம்)



**க**டந்த வருடம் டிசம்பர் 7ந் திகதியன்று, கவிஞர் கல்வியாளர் மற்றும் பெரும் அறிஞருமான 44 வயது நிறைந்த ர:பெட் அல்–அரீர் (Refaat al-Areer) அவர்கள் தனது சகோதரர், சகோதரி மற்றும் சகோதரியின் நான்கு குழந்தைகளுடன் காஸா வடக்குப் பகுதியில் வைத்து இஸ்ரேலிய குண்டுவீச்சில் கொல்லப்பட்டார்.

ர:பெட் அல்–அரீர், 2001 ஆம் ஆண்டு காஸா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழியில் பட்டதாரிப் பட்டத்தையும், 2007 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் முதுமானிப்பட்டத்தையும், 2017 ஆம் ஆண்டு பி.எச்.டி. மலேசியா புத்ரா பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் கலாநிதிப்பட்டத்தையும் பெற்றார்.

'நான் இறந்தாக வேண்டும்' (If I must die) என்ற இக்கவிதையை ர:பெட் அல்–அரீர அவர்கள் தனது இறப்புக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் எழுதியுள்ளார். இதுவரையில் ஏறத்தாழ 50 உலக மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டு, பல இலட்சக்கணக்கானோரால் படிக்கப்பட்டு வரும் இக்கவிதையை, எஸ்.வி. ராஜதுரை அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார்.

நான் இறந்தாக வேண்டுமென்றால்
நீ வாழ்ந்தாக வேண்டும்
என் கதையைச் சொல்வதற்கு
என் பொருட்களை விற்பதற்கு
ஒரு துண்டுத் துணியையும்
சில மென்கயிறுகளையும் வாங்குவதற்கு
(அதை நீண்ட வாலும் வெண்ணிறமும் கொண்டதாகச் செய்)
அப்போது காஸாவின் ஏதோ ஓரிடத்தில்
கண்ணில் வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில்
எவரிடமும் விடை பெறாமல்
தன் தசையிடமிருந்தும்கூட
விடை பெறாமல் தன்னிடமிருந்தும்கூட
விடை பெறாமல்
பெருந்தீயை விட்டுச்சென்ற
தன் தந்தைக்காகக்
காத்துக் கொண்டிருக்கையில் –
பட்டம், நீ செய்த பட்டம்
மேலே பறந்து கொண்டிருப்பதை பார்ப்பதற்கும்
அன்பைத் திருப்பிக் கொண்டு வருகின்ற
ஒரு தேவதூதன்
அங்கிருப்பதாக
ஒரு கணம் நினைத்துக்கொள்ளவும்
நான் இறந்தாக வேண்டும்
அது நம்பிக்கையைக்
கொண்டு வரட்டும்
அது ஒரு கதையாக இருக்கட்டும்.

# பலஸ்தீனர்களுக்கு மறுக்கப்படாத கனவு காணும் உரிமை!

**ஜ**னவரி, 26, 2024 அன்று சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகள் காஸாவிலுள்ள பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் இனப்படுகொலை நிகழ்த்திக் கொண்டிருப்பது 'உண்மை போல்' தெரிகிறது என்று கண்டு பிடித்துள்ளனர். இஸ்ரேல் இனப்படுகொலை என்ற குற்றத்தைத் தடுத்தல், தண்டனை கொடுத்தல் ஆகிய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை மீறும் எதையும் செய்வதைத் தடுக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளது, சர்வதேச நீதிமன்றம். ஆனால் அது 2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தது போல், போர் நிறுத்தம் செய்யுமாறு அழைப்பு விடுக்காவிட்டாலும், இந்த உத்தரவை சாதாரணமாகப் படித்தால் கூட நீதிமன்றத்தின் இந்த உத்தரவை நடைமுறைப்படுத்த இஸ்ரேல் காஸா மீதான தனது தாக்குதலை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்பது புரியும். சர்வதேச நீதிமன்றம் தனது தற்காலிக நடவடிக்கையின் ஒரு பகுதியாக, இஸ்ரேல் ஒரு மாதத்துக்குள் சர்வதேச நீதிமன்றத்துக்கு பதிலளிக்க வேண்டுமெனவும், தனது உத்தரவை அது எப்படி நடைமுறைப்படுத்தி உள்ளது என்று கூற வேண்டுமென்றும் பணித்துள்ளது.

**இன்னொரு வழக்கு பெப்ரவரி 19 இல் விசாரணை**

இஸ்ரேல் ஏற்கனவே சர்வதேச நீதிமன்றத்தின் கண்டுபிடிப்புக்களை நிராகரித்து விட்டாலும், டெல் அவிவ் மீது சர்வதேச அழுத்தம் அதிகரித்து வருகிறது. அல்ஜீரியா, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிடம் சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவை அமுல்படுத்துமாறு கோரியுள்ளது. இந்தோனேசியாவும், சிலோவேனியாவும் சர்வதேச நீதிமன்றத்தில் தனி வழக்குகளைத் தொடர்ந்துள்ளன. அவை மீதான விசாரணை பெப்ரவரி 19 அன்று தொடங்கவுள்ளது. ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலங்களின் மீதான இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக் கொள்கைகள் மீது டிசம்பர் 2022 இல் ஐ.நா. பொதுச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தின்படி ஓர் ஆலோசனைக் கருத்துக் கூறுமாறு அவை கோரியுள்ளன. சிலியும்,



Malak Mattar, Palestine, "Gaza," 2024

மெக்சிகோவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் காஸாவில் நிகழ்த்தப்பட்டுள்ள குற்றங்களை விசாரிக்க வேண்டுமென்று கோரியுள்ளன.

*பேராசிரியர் விஜய் பிரசாத்*

சர்வதேச நீதிமன்றத்தின் உத்தரவு மீதான இஸ்ரேலின் எதிர்வினை குணாம்ச ரீதியில் நிராகரிப்பே. அதன் தேசிய பாதுகாப்பு அமைச்சர் இரமர் பென் கிவிர் (Itamar Ben Gvir) சர்வதேச நீதிமன்றத்தை 'ஓரிறை எதிர்ப்பு நீதிமன்றம்' (antisemitic court) என்று குற்றம் சாட்டி, அது 'நீதியைத் தேட வில்லை, மாறாக யூத மக்களை தண்டிக்க முயல்கிறது' என்று கூறியுள்ளார். வினோதமான முறையில் பென் கிவிர், சர்வதேச நீதிமன்றம் 'நாசிப்படுகொலையின் போது அமைதி காத்ததாக'க் குற்றம் சாட்டியுள்ளார். ஐரோப்பிய யூதர்கள், ரோமானிகள், ஓரினச் சேர்க்கையாளர்கள், கம்யூனிஸ்டுகள் மீது நாஜி ஜெர்மனி அரசு நடத்திய படுகொலை 1941 பிற்பகுதியிலிருந்து 1945 மே மாதம் வரை நிகழ்த்தப்பட்டது.

**இல்லாத நீதிமன்றம் மீது குற்றம் சாட்டும் இஸ்ரேல்**

அப்போதுதான் சோவியத் செஞ்சேனை ராவென்ஸ்ப்ருக் (Ravensbrück), சச்சென்ஹவுசன் (Sachsenhausen), மற்றும் ஸ்டுட்ஹொ:ப் (Stutthof) இலிருந்து சிறைக்கைதிகளை விடுவித்தது. எனினும், சர்வதேச நீதிமன்றம் இந்தப் படுகொலை முடிவுக்கு வந்து ஒரு மாதத்துக்குப் பிறகுதான், அதாவது 1945 ஜூனில்தான் அமைக்கப்பட்டது என்பதுடன், 1946 ஏப்ரலில்தான் தனது வேலையைத் தொடங்கியது. சர்வதேச நீதிமன்றம் இல்லாத போதே அது படுகொலை நிகழ்ந்த போது அமைதி காத்தது என்று கூறி சட்டவிரோதமாக்க இஸ்ரேல் முயற்சிப்பதும், சர்வதேச நீதிமன்றத்தை 'ஓரிறை எதிர்ப்பு நீதிமன்றம்' என்று குற்றம் சாட்டுவதும் சர்வதேச நீதிமன்றம் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு அதனிடம் எந்த பதிலும் இல்லையென்பதைக் காட்டுகின்றன.

அதே சமயம், காஸாவிலுள்ள பலஸ்தீனர்கள் மீது குண்டுவீச்சு தொடர்கிறது. தென்னாப்பிரிக்காவில் ஜொஹன்னஸ்பேர்க் (Johannesburg) இலுள்ள ஆப்பிரிக்க–மத்திய கிழக்கு மையத்தின் இயக்குனரான என் நண்பர் நயீம் ஜீனா (Na'eem Jeenah) காஸாவிலுள்ள பல்வேறு துறைகள் அளித்த புள்ளிவிபரங்களையும், ஊடகத் தகவல்களையும் அங்குள்ள நிலைமை குறித்து தினசரி செய்தியை அளிப்பதற்காக மீள்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். ஜனவரி 26 ஆம் திகதி செய்தியின்படி, 26,000 பலஸ்தீனர்களுக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர். அதில் ஒக்ரோபர் 7 இலிருந்து கொல்லப்பட்ட குழந்தைகள் குறைந்தபட்சம் 11,000. சுமார் 69,000 பேர் காயமடைந்துள்ளனர். காஸா குடிமக்கள் 2.3 மில்லியன் பேருக்கு மேல் அகதிகளாக வெளியேறியுள்ளனர். இந்த எண்ணிக்கைகள் திகைக்க வைக்கின்றன.

இக்காலகட்டத்தில் இஸ்ரேல் 394 பாடசாலைகளையும், கல்லூரிகளையும் சேதப்படுத்தியுள்ளது, அவற்றில் 99 பாடசாலைகளை அழித்துள்ளது. 30 மருத்துவமனைகளை அழித்து 337 மருத்துவப் பணியாளர்களைக் கொன்றுள்ளது. இது தான் சர்வதேச நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட இன அழிப்பு வழக்கின் நிதர்சனமும், அதற்கு நீதிமன்றம் அளித்த தற்காலிக நடவடிக்கைகளும். அதில்

இந்தியாவைச் சேர்ந்த நீதிபதி தல்வீர் பண்டாரி மேலும் ஒரு படி சென்று வெளிப்படையாக, 'அனைத்து சண்டைகளும், மோதல்களும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்' என்று கூறினார்.

மரணமடைந்தவர்களில் பலர் பலஸ்தீன ஓவியர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், சிற்பிகள். 1948 நக்பாவுக்குப் (பேரழிவு) பிறகு பலஸ்தீன வாழ்க்கையில் கடந்த 76 ஆண்டுகளாக இருக்கும் தாக்கம் ஏற்படுத்தும் அம்சங்களில் ஒன்று பலஸ்தீன கலாச்சார உருவாக்கத்தின் தொடரும் வளம். ஜெனின் அல்லது காஸா நகரத்தில் எந்த ஒரு தெருவில் வேகமாக நடந்தாலும் அங்கு ஸ்டுடியோக்களும், கலரிகளும் நிறைந்திருப்பதைக் காட்டும். அங்கு பலஸ்தீனர்கள் தமது கனவு காணும் உரிமையை வலியுறுத்துகிறார்கள்.

1974 பிற்பகுதியில் தென்னாப்பிரிக்கப் போராளியும், கலைஞருமான பரி வின்செண்ட் ஃபீன்பர்க் (Barry Vincent Feinberg) ஆப்பிரிக்க ஆசிய பத்திரிகையான லோட்டஸ் (Lotus) இல் ஒரு கட்டுரையை எழுதினார். அந்தக் கட்டுரை ஃபீன்பர்குக்கும் 'ஒரு இளம் பாலஸ்தீனக் கவிஞருக்கும்' இடையிலான பேட்டியுடன் தொடங்குகிறது. ஏன் லோட்டஸில் வெளியாகும் வழக்கத்துக்கு மாறாக அதிகமாக வெளியாகும் கவிதைகள் பலஸ்தீனக் கவிஞர்களிடமிருந்து வருகின்றன என்று ஃபீன்பர்க் ஆச்சரியப்படுகிறார். ஃபீன்பர்கின் கருத்தைக் கண்டு அதிசயப்படும் இளம் கவிஞர் பதிலளிக்கிறார்: 'என் மக்களுக்கு ஒருபோதும் மறுக்கப்படாத ஒரே விஷயம் கனவு காணும் உரிமை மட்டுமே.' (The only thing my people have never been denied is the right to dream)

**'அதிர்ச்சியிலிருந்து மீள ஓவியம் தீட்டு'**

1999 டிசம்பரில் பிறந்த இளம் பலஸ்தீன ஓவியர் மாலக் மற்றர் (Malak Mattar) கனவு காண்பதை நிறுத்த மறுப்பவர். 2014 இல் இஸ்ரேல் தனது ஒப்ரேஷன் ப்ரொடக்டிவ் எட்ஜை (Operation Protective Edge) என்ற இராணுவ நடவடிக்கையை காஸாவில் நிகழ்த்தி, ஒரே மாதத்தில் சுமார் இரண்டாயிரம் பலஸ்தீனர்களைக் கொன்றபோது, மாலக்குக்கு 14 வயதுதான். ஒரு தலை முறைக்கு மேல் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலப்பகுதியின் மேல் நீண்டு நீடிக்கும் குண்டு வீச்சால் நிகழ்ந்த கொடூரமான மரணங்கள். இந்த குண்டு வீச்சால் ஏற்பட்ட மன அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்காக ஓவியம் தீட்டுமாறு மாலக்கின் அம்மா அவரை வலியுறுத்தினார். மாலக்கின் பெற்றோர் இருவரும் அகதிகள்: அவளது தந்தை இப்போது அஷ்கெலோன் (Ashkelon) என்று அழைக்கப்படும் அல்–ஜோரா (al-Jorah)வைச் சேர்ந்தவர். அவளது அம்மா அல்–படானி அல்–சார்கி (al-Batani al-Sharqi) கிராமத்தைச் சேர்ந்தவர். அந்த கிராமம் இப்போது காஸா ஸ்ட்ரிப் (Gaza Strip) என்று அழைக்கப்படும் நிலப்பகுதியின் விளிம்பில் இருக்கும் பலஸ்தீன கிராமங்களில் ஒன்று.

1948, நவம்பர் 25 அன்று புதிதாக உருவாக்கப்பட்ட இஸ்ரேலிய அரசு 40 ஆம் எண் உத்தரவை இட்டது. அந்த உத்தரவு அல்–படானி அல்–சார்கி போன்ற கிராமங்களிலிருந்து பலஸ்தீனர்களை வெளியேற்ற இஸ்ரேலியத் துருப்புக்களுக்கு அதிகாரமளித்தது. 'இந்த கிராமங்களிலிருந்து அராபிய அகதிகளை வெளியேற்றி, அவர்கள் திரும்பி வருவதைத் தவிர்க்க, கிராமங்களை அழிப்பது உங்களது பங்கு. கிராமங்களை எரித்து, கல் வீடுகளை நொருக்குங்கள்' என்று இஸ்ரேலிய தளபதிகள் கட்டளையிட்டனர்.

**ஒரு பக்கம் சாய்ந்த பெண்களின் தலைகள்**

மாலக்கின் பெற்றோர் இந்த நினைவுகளைச் சுமந்தாலும், இந்த ஆக்கிரமிப்பையும் போரையும் தாண்டி, தமது குழந்தைகளுக்குக் கனவு களையும், நம்பிக்கையும் விதைக்க முயல்கின்றனர். மாலக் ஒரு தூரிகையை எடுத்து பிரகாசமான வண்ணங்களுடன் ஒளிமயமான உலகுடன் பலஸ்தீன உருவப்படத்தை, 'சுமுத்' (உறுதிப்பாடு)தின் சின்னமான ஒலிவ் மரத்துடன் வரைகிறாள். அவள் ஒரு பதின்ம வயதுப் பெண் என்பதால் இளம் சிறுமிகளையும், பெண்களையும், பெரும்பாலும் குழந்தைகளுடனும், புறாக்களுடனும் வரைகிறாள். எழுத்தாளர் இண்ட்லீப் ஃபராசி சாபர் (Indlieb Farazi Saber) இடம் அவள் கூறுவது போல் பெண்களின் தலைகள் அடிக்கடி ஒருபக்கமாகச் சாய்ந்துள்ளன. அதற்கு அவள் கூறும் காரணம், 'நீங்கள் நிமிர்ந்து நேராக நின்றால், நீங்கள் நிலையாக இருப்பதைக் காட்டும். ஆனால் தலை ஒரு பக்கம் சாய்ந்திருக்கும்போது உடைந்து போனதன், ஒரு பலவீனத்தின் உணர்வைத் தூண்டும். நாம் மனிதர்கள், போருக்கிடையில் வாழ்கிறோம், கொடூரமான கணங்களுக்கிடையில் வாழ்கிறோம்… சிலசமயம் சகிப்புத்தன்மை தவறி விடுகிறது.'

**பலஸ்தீன பிக்காசோ**

மாலக்கும் நானும் இந்த வன்முறைக் காலம் முழுவதும் தொடர்பில் இருந்தோம். அவளது அச்சங்கள் வெளிப்பட்டன, அவளது வலிமை குறிப்பிடத்தக்கது. ஜனவரியில் அவள் எழுதினாள், 'நான் இன அழிப்பின் பல்வேறு அம்சங்களைக் காட்டும்படி ஒரு மிகப்பெரிய ஓவியத்தை 5 மீட்டர் திரைச்சீலை (canvas) இல் வரைந்து கொண்டிருக்கிறேன்.' மாலக் வரையத் தொடங்கிய ஓவியம் பாப்லோ பிக்காசோவின் புகழ்பெற்ற ஓவியமான குவேர்னிகா (Guernica - 1937)ஐ பிரதிபலிக்கத் தொடங்கியது. அவரால் அந்த ஓவியம் பாஸ்க் (Basque) பகுதியில் ஒரு நகரத்துக்கு எதிராக பாசிச ஸ்பெயின் நடத்திய படுகொலைகளின் நினைவாக வரையப்பட்டது.

2022 இல் கிழக்குக்கு அருகில் இருக்கும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிவாரணம் மற்றும் பணிகள் நிலையம் (United Nations Relief and Works Agency - UNRWA) மாலக் குறித்து ஒரு சுயவிவரத்தை வெளியிட்டது. அதில் அவரை 'பலஸ்தீன பிக்காசோ' (Palestine's Picasso) என்று குறிப்பிட்டது. அந்தக் கட்டுரையில் மாலக் எழுதினார், 'நான் பிக்காசோவால் மிகவும் தாக்கம் பெற்றேன். முதன்முதலில் வரையத் தொடங்கிய போது அவரைப் போல் வரைய முயன்றேன்.'

மாலக்கின் புதிய ஓவியம் பலஸ்தீன மக்களின் இதயம் நொறுங்கியதையும், அவர்களது உறுதிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது. அந்த ஓவியம் இஸ்ரேலிய இன அழிப்பின் மீதான குற்றச்சாட்டையும், பலஸ்தீனர்களின் கனவு காணும் உரிமையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

நீங்கள் அந்த ஓவியத்தை நெருக்கமாகப் பார்த்தால் இன அழிப்பில் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கலாம்: மருத்துவப் பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், கவிஞர்கள் மசூதிகள், தேவாலயங்கள் புதைக்கப்படாத உடல்கள், நிர்வாணமான சிறைவாசிகள், சிறு குழந்தைகளின் உடல்கள்

குண்டுவீசப்பட்ட கார்கள் மற்றும் தப்பியோடும் அகதிகள்.

ரெ..பாத் அலரீயர் (Refaat Alareer)இன் கவிதையான, 'நான் சாக வேண்டுமென்றால்' என்பதைக் குறிக்கும்படி ஒரு பட்டம் வானில் பறந்து கொண்டிருக்கும். ('என் கதையைக் கூற நீ உயிருடன் இருக்க வேண்டும்... காஸாவில் எங்கோ கண்ணால் சுவர்க்கத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை... பட்டத்தைப் பார்த்தால், நீ உருவாக்கிய வானில் பறக்கும் என் பட்டத்தைப் பார்த்து அங்கு அன்பைத் திரும்பக் கொண்டு வரும் ஒரு தேவதை இருக்கிறது என்று நினைக்கும்')

**அல்–சாதியின் தூரிகையை எடுத்து...**

மாலக்கின் ஓவியங்கள் பலஸ்தீன ஓவியப் பாரம்பரியத்தில் வேர் கொண்டவை. அராபிய கிறிஸ்த்துவ படிமவியத்தை (iconography) ஒட்டிய வரலாற்றால் ஊக்கம் பெற்றவை. இந்தப் பாரம்பரியம் பதினேழாம் நூற்றாண்டில் அலெப்போ (Aleppo)வைச் சேர்ந்த யூசூ..ப் அல்–ஹலாபி (Yusuf al-Halabi) யால் வளர்த்தெடுக்கப்பட்டதாகும். 'அலெப்போ பாணி' (Aleppo Style) யானது 'ஜெருசலேம் பாணியாக' (Jerusalem Style) வளர்ந்து இஸ்லாமிய சிறு சித்திரங்கள், பூத்தையல் ஆகியவற்றிலிருந்து தாவரங்கள் விலங்கினங்களை அறிமுகப்படுத்தி, இந்தப் பாணியை பிரகாசமடையச் செய்தன என்று கலை விமர்சகர் கமால் பௌலட்டா (Kamal Boullata) இஸ்திஹார் அல்–மக்கன் (Istihdar al-Makan)இல் எழுதினார்.

நான் முதலில் மக்கனின் ஓவியத்தைப் பார்த்தபோது, அவள் ஜூல்..பா அல்–சாதி (Zulfa al-Sa'di, 1905-1988)இன் வாழ்க்கையை மீட்டெடுத்துள்ளார் என்று நினைத்துக் கொண்டேன். ஜூல்..பா அல்–சாதி தனது காலத்தில் மிகவும் முக்கியமான ஓவியர். பலஸ்தீன அரசியல் கலாச்சார நாயகர்களை வரைந்தவர். அல்–சாதி *1948* நக்பாவின் போது ஜெருசலேமிலிருந்து தப்பி ஓட நிர்ப்பந்திக்கப்பட்டதால், ஓவியம் வரைவதை நிறுத்தி விட்டார். மீதமிருக்கும் அவரது ஓவியங்கள் அவர் குதிரையின் முதுகில் ஏற்றிச் சென்றவை மட்டுமே.

அல்–சாதி தனது மீதமிருக்கும் வாழ்க்கையை டமாஸ்கஸ் (Damascus) இல் இருக்கும் ஐ.நா. நிவாரணம் மற்றும் பணிகள் நிலையத்தின் கீழுள்ள பாடசாலையில் பலஸ்தீனக் குழந்தைகளுக்கு ஓவியம் வரையச் சொல்லிக் கொடுப்பதில் கழித்தார். அப்படிப்பட்ட ஒரு பாடசாலையில்தான் மாலக் ஓவியம் பயின்றார். மாலக், அல்–சாதியின் தூரிகைகளை எடுத்துக் கொண்டு, அவருக்காக வரைவதைப் போல் தோன்றியது. இஸ்ரேல் அந்த பாடசாலையைக் குறிவைத்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. அத்தோடு இஸ்ரேல் வெற்றிகரமாக பல முக்கியமான உலகளாவிய வட அரசுகள் (Global North governments) மீது நிர்ப்பந்தம் செலுத்தி, ஐ.நா. பொதுச்சபையால் உருவாக்கப்பட்ட அந்த நிறுவனத்துக்கு நிதி அளிப்பதை நிறுத்தி விட்டது.

**நிதியளிப்பதை நிறுத்துவது இன அழிப்பை அதிகரிப்பதே**

ஐக்கிய நாடுகள் சபை *1949* இல் நிறைவேற்றிய தீர்மானம் *302*, பலஸ்தீன அகதிகளுக்கு நேரடியான நிவாரணம், பணித்திட்டங்களுக்கு நிதி அளிப்பதை உறுதிப்படுத்தியது. அதன் மூலம் தான் அந்தப் பாடசாலை உருவானது. எந்த ஓர் ஆண்டை எடுத்துக் கொண்டாலும் மாலக் போன்ற ஐந்து இலட்சம் பலஸ்தீனக் குழந்தைகள் இந்தப் பள்ளிகளில் படிக்கின்றனர். பலஸ்தீன பொருளாதாரக் கொள்கை ஆய்வு நிறுவனத்தின் (Palestine Economic Policy Research Institute) தலைமை இயக்குநர் ராஜா க்ஹாலிதி (Raja Khalidi) இந்த நிதி நிறுத்தத்தைப் பற்றி இப்படிக் கூறுகிறார்: 'ஐ.நா. நிறுவனத்தின் நிதிகளின் நீண்ட கால நிச்சயமற்ற நிலையைக் கருத்தில் கொண்டு... பலஸ்தீன அகதிகளுக்கும், காஸாவிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் சுமார் *1.8* மில்லியன் மக்களுக்கும் முக்கியமான சேவைகளை அளிக்கும் அதன் இன்றியமையாத பங்கின் வெளிச்சத்தில், அதன் நிதியை இந்த சமயத்தில் வெட்டுவது என்பது, ஏற்கனவே இன அழிப்பு என்ற ஆபத்திலிருக்கும் பலஸ்தீனர்களின் வாழ்க்கைக்கு இருக்கும் ஆபத்தை அதிகரிக்கும்.'

மாலக்கின் இந்த ஓவியங்களை சுற்றுக்கு விட்டு, அவற்றை சுவர்களிலும், பொது இடங்களிலும் உலகம் முழுக்க உருவாக்குவதற்கு உங்களை நான் ஊக்குவிக்கிறேன். தற்போது நடைபெறும் பலஸ்தீன மக்கள் மீதான இன அழிப்பைப் பார்க்க மறுப்பவர்களின் இதயத்தை நாம் ஊடுருவிச் செல்வோம்.

**தமிழில்: கி.ரமேஷ்**

## 'நெருப்புடன் விளையாட வேண்டாம்' பிலிப்பைன்ஸிற்கு சீனா எச்சரிக்கை

"சீனாவின் முக்கிய நலன்களின் மையத்தில் தாய்வான் உள்ளது என்றும் கடக்க முடியாத சிவப்புக் கோடாகவும் அடிமட்ட நிலையாகவும் இது விளங்குகின்றது" எனவும் சீன வெளியுறவு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வாங் வென்பின் (Wang Wenbin) சீனாவின் நிலைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

தாய்வானில் இருந்து 200கிமீ (124 மைல்) தொலைவில் உள்ள பற்றனஸ் தீவுகளில் (Batanes Islands) துருப்புக்கள் மற்றும் கட்டுமானத்தை அதிகரிக்க பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு செயலாளர் கில்பேர்டோ தியோடோரோ (Gilberto Teodoro) உத்தரவிட்டுள்ளார் என்ற செய்தியையடுத்து சீனா இவ்வாறு கடும் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளது.

"பிலிப்பைன்ஸ் தரப்பு தாய்வானைப் பற்றித் தெளிவான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். விவேகத்துடன் செயல்பட வேண்டும். தாய்வான் பிரச்சினையில் மற்றவர்களால் பயன்படுத்தப்பட்டு தங்களுக்குக் கேடு விளைவிப்பதைத் தவிர்த்தும், நெருப்புடன் விளையாடுவதிலிருந்து விலகியுமிருக்க வேண்டும்" என்று வாங் வென்பின் தெரிவித்துள்ளார்.


"சீனாவும் பிலிப்பைன்ஸும் நீண்டகால நட்பு நாடுகளாக இருக்கின்றன, நல்ல அண்டை நாடுகள் என்ற வகையில் தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு போன்ற விடயங்களில் பரஸ்பர மரியாதையுடன் ஒருவருக்கொருவர் நடந்து கொள்ள வேண்டும் என்றும், ஒருவருக்கொருவர் உள் விவகாரங்களில் தலையிடக்கூடாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

சீனா தாய்வானை தன்னுடைய ஒரு பகுதியாகவே பார்க்கிறது. பிலிப்பைன்ஸ் மற்றும் அமெரிக்கா உட்பட பெரும்பாலான நாடுகள் தாய்வானை சுதந்திர நாடாக அங்கீகரிக்கவில்லை. மேலும் தாய்வானை வலுக்கட்டாயமாக கைப்பற்றும் சீனாவின் எந்தவொரு முயற்சியையும் அமெரிக்கா எதிர்ப்பதோடு,

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# உக்ரைன் விடயத்தில் இலங்கை நடுநிலை வகிக்க வேண்டும்

***– ரஷ்ய தூதுவர் லெவன் ஷாகர்யன்***



ரஷ்ய தூதுவர் லெவன் ஷாகர்யன் (Levan Dzhagaryan), டெய்லி மிரர் (Daily Mirror) பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், இலங்கை – ரஷ்ய உறவுகளின் தற்போதைய நிலை மற்றும் எதிர்காலத்திற்காக என்ன திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறித்து கலந்துரையாடினார்.

கேள்வி: இருதரப்பு உறவுகளை மேம்படுத்த ரஷ்யாவின் உயர்மட்ட தூதுக்குழுவினரின் அண்மைய இலங்கை விஜயம் எவ்வாறு உதவியது?

பதில்: எமது இருதரப்பு உறவுகளின் தற்போதைய நிலை குறித்து நாங்கள் திருப்தி அடைகின்றோம். இதன் இன்னுமொரு வெளிப்பாடே ரஷ்ய உயர்மட்ட தூதுக்குழுவின் வருகையாகும்.

ரஷ்ய கூட்டமைப்பின் பாதுகாப்புச் சபையின் செயலாளர் நிகோலாய் பட்ருஷேவ் (Nikolai Patrushev) தலைமையில் 40 இற்கும் மேற்பட்டோர் கொண்ட பெரியதொரு தூதுக்குழுவாக அது இருந்தது. 2023 டிசம்பர் 6 ஆம் திகதி நிகோலாய் பட்ருஷேவ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மிக முக்கியமான சந்திப்பொன்றினை நடத்தினார். பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்னவுடனும் அவர் சந்திப்பொன்றினை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பு கடந்த ஆண்டு மே மாதம் மொஸ்கோவில் நடந்தது. எனவே இது இருதரப்பு பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியே. அத்துடன், கடந்த டிசம்பரில் கொழும்புக்கு வந்திருந்த பட்ருஷேவ், அடுத்த வருடத்தில் ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு குணரத்னவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எங்கள் அமைச்சகங்களின் பிரதிநிதிகள் – உள்துறை அமைச்சர், பாதுகாப்பு விவகார அமைச்சர் மற்றும் வேறு சில அமைப்புகள் – உடன் சந்திப்புகள் நிகழ்ந்தன.

ரஷ்யா – இலங்கை வர்த்தக சபையின் அனுசரணையின் கீழ் விவசாயம், போக்குவரத்து, கைத்தொழில், மத்திய வங்கி அமைச்சுகளின் ரஷ்ய மற்றும் இலங்கைப் பிரதிநிதிகளுக்கிடையில் தனியான கூட்டமொன்று நடைபெற்றது. நாங்கள் இவற்றில் திருப்தி அடைகின்றோம். சில பிரச்சினைகள் குறித்து நாங்கள் உரையாடியதுடன், இரு தரப்பிலிருந்தும் சில முன்மொழிவுகளை முன்வைத்தோம். இந்த பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சி ஏப்ரல் மாதத்தில் நடைபெறும்.

கேள்வி: தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் ரஷ்யா – உக்ரைன் போர் மற்றும் மேற்கு ஆசிய பிராந்தியத்தில் காணப்படும் ஒரு நெருக்கடியான நிலையின் ஒரு விசேட காலகட்டத்தில் பாதுகாப்பு ஒத்துழைப்புக் கோரப்படுகின்றது. இவ்வாறான சூழலில் இலங்கையுடன் எந்த மாதிரியான பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பேணுவதற்கு ரஷ்யா எதிர்பார்க்கின்றது?

பதில்: எங்கள் புரிதலில் இது ரஷ்யா – உக்ரைன் போர் அல்ல என்பதை முதலில் நான் கூற விரும்புகிறேன். இது ரஷ்யா தொடங்கிய விசேட இராணுவ நடவடிக்கை. இது உக்ரைன் பிராந்தியத்திலுள்ள மேற்கத்தைய நாடுகளின் கூட்டுக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான போர். மேற்கத்தைய நாடுகள் ரஷ்யாவுக்கு ஒரு தோல்வியை, அதாவது ஒரு மூலோபாயத் தோல்வியை ஏற்படுத்த விரும்புகின்றன. ஆனால் உக்ரைனில் உள்ள பொம்மை ஆட்சியையும் அவர்களின் வெளிநாட்டு ஆதரவாளர்களையும் நாங்கள் தோற்கடிப்போம். பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பொறுத்தவரையில், முக்கியமாக நாங்கள் இலங்கையர்களுக்கான கல்வி பற்றி பேசிக் கொண்டிருக்கின்றோம்

கேள்வி: கல்வி என்பதின் அர்த்தம்?

பதில்: ஓம், இராணுவத்தினருக்கான கல்வி என்று சொல்லலாம். மாணவர்கள் – பொதுமக்களுக்கான கல்வி மாத்திரமல்ல, இராணுவத்தினருக்குமான – கல்வி பற்றி நாங்கள் கலந்துரையாடி வருகின்றோம்.

கேள்வி: இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையினை பாதுகாப்புக் கண்ணோட்டத்தில், உண்மையில் நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

பதில்: நிச்சயமாக, இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலை மிகவும் முக்கியமானது. உக்ரைன் தொடர்பாகவும் உங்களது சமநிலையான மற்றும் நடுநிலையான நிலைப்பாட்டை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். மேற்குலகிலிருந்து உங்கள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும், உங்கள் அரசாங்கம் இந்த நடுநிலை நிலையைப் பேணும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளுடனும் இலங்கை நல்லுறவுகளை வைத்திருப்பது மிகவும்

முக்கியமானதாகும்.

கேள்வி: இலங்கை உள்நாட்டுப் போரின் போது, நாங்கள் ரஷ்யாவிடமிருந்து ஏராளமான இராணுவ உபகரணங்களை வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தோம். இப்போதைய நிலவரம் என்ன?

பதில்: ரஷ்யாவிலிருந்தும் முன்னாள் சோவியத் யூனியனிலிருந்தும் இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது. ஒவ்வொன்றையும் கலந்துரையாடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். உங்களுக்கு மேற்கத்தைய நாடுகள், இந்தியா மற்றும் சீனாவுடன் இராணுவ ஒத்துழைப்பு உள்ளது. எனவே, ஏன் ரஷ்யாவுடன் இருக்கக்கூடாது?

கேள்வி: அந்த உயர்மட்ட விஜயத்தின் பின்னர் எடுக்கப்பட்ட அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன?

மேலும் சில வருகைகளை எதிர்பார்க்கின்றோம். பல்வேறு மட்டங்களில் அரசியல் கலந்துரையாடல்களுக்கான வாய்ப்புகள் தொடர்பாக நாங்கள் இப்போது செயலாற்றி வருகின்றோம். ஒருவேளை சில ரஷ்யப் பிரதிநிதிகள் வருகை தரலாம். உதாரணமாக, விவசாயத்துறை அமைச்சருக்கு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருமாறு அழைப்பு வந்துள்ளது. அதாவது, ஐ.நா அனுசரணையுடன் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பங்கேற்குமாறு ரஷ்ய பிரதிநிதி டிமிட்ரி பத்ருஷேவுக்கு, இலங்கையின் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர அழைப்பு அனுப்பியுள்ளார்.

கேள்வி: விவசாயத்துறையில், ஒத்துழைப்புக்கான சாத்தியக்கூறுகள் என்னென்ன?

பதில்: முதலில் சகலவித உரங்களையும் உணவையும் விநியோகிப்பது. கோதுமை மற்றும் வேறு சில பொருட்களையும் வழங்க நாங்கள் தயாராக உள்ளோம். தாவர எண்ணெயை ஏற்றிச் செல்லும் எங்கள் கப்பல்களில் இரண்டு ஏற்கனவே கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளன. இது இலங்கையின் நட்பு மக்களுக்கு செய்யும் ஒரு மனிதாபிமான உதவியாகும். கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் இதேபோன்ற மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு கையளிக்கும் விழாவில் நான் கலந்து கொண்டேன். இது இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் உணவு வழங்குவதற்கான உலக உணவுத் திட்டத்திற்கு ரஷ்யாவின் பங்களிப்பின் ஒரு பகுதியாகும்.

கேள்வி: சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரையில் ரஷ்யா – இலங்கை இடையேயான ஒத்துழைப்பு சிறப்பாக நடந்து வருகிறது. இந்த நாட்களில் இலங்கைக்கு ரஷ்யாவிலிருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். எண்ணிக்கையை அதிகரிக்க ரஷ்யா உண்மையில் எந்த வழிகளில் உதவ முடியும்?

பதில்: ரஷ்யர்களுக்கு இலங்கை நன்கு அறியப்பட்ட இடமாக இருப்பதால் விசேடமான பிரச்சாரம் எதுவும் தேவையில்லை. அவர்கள் இங்கு வரும்போது மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். ரஷ்யாவிலிருந்து நேரடி விமான சேவைகள் மீண்டும் ஆரம்பத்ததிலிருந்து, பெப்ரவரியில் 200,000 பயணிகள் வருகை இலக்கை அடையலாம் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மொஸ்கோவிலிருந்தும் ஏனைய ரஷ்ய நகரங்களிலிருந்தும் கொழும்பு மற்றும் மத்தளைக்கு வாரத்திற்கு பல நேரடி விமான சேவைகள் உள்ளன.

அரபு அல்லது வளைகுடா நாடுகள் வழியாகவும் ஏராளமான ரஷ்யர்கள் இலங்கைக்கு வருகிறார்கள். இது உங்கள் பொருளாதாரத்திற்கு பெரியதொரு பங்களிப்பாகும். இங்கே அவர்கள் பணம் செலவழிக்கிறார்கள். இது உங்கள் வரவு செலவுத் திட்டத்திற்கும் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வேலைவாய்ப்புக்கும் மிகவும் முக்கியமானதாகும்.

கேள்வி: உயர்மட்டச் சந்திப்பின் போது, இலங்கை அணுசக்தி அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் எஸ்.ஆர்.டி.ரோசா, அணுசக்தி தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்து விளக்கமளித்திருந்தார். இந்த விடயத்தில் நீங்கள் எவ்வளவு தூரம் முன்னேற்றம் கண்டுள்ளீர்கள்?

பதில்: முதலாவதாக, பேராசிரியர் ரோசா மற்றும் அவரது சக பணியாளர்களின் ஒத்துழைப்புக்காகவும், ரஷ்யாவுடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதற்காகவும், எனது தனிப்பட்ட மரியாதையை மீண்டும் ஒருமுறை தெரியப்படுத்த இந்த வாய்ப்பினைப் பயன்படுத்த விரும்புகிறேன். இலங்கையில் தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகள் உள்ளன. நான் சொல்ல வருவது சட்டம், இது தீர்க்கப்பட வேண்டியுள்ளது. அணுசக்தி நிலையம் நிறுவுவது தொடர்பாக ஏனைய நாடுகளிடமிருந்தும் இலங்கைக்கு சில முன்மொழிவுகள் கிடைத்துள்ளதை நாங்கள் அறிவோம் என்பதால், பேச்சுவார்த்தைகளை தொடர்வதனை வழிவகுக்க நாங்கள் ஒன்றிணைந்து முயற்சிக்கின்றோம்.

நாங்கள் ஏதாவது வழங்குவதற்கு தயாராக இருக்கின்றோம். ரோசாட்டம் அரச அணு சக்தி கூட்டுத்தாபனம் (Rosatom State Atomic Energy Corporation) இலிருந்து ரஷ்ய தூதுக்குழு இங்கு வருவதற்கு தேவையான சூழ்நிலைகளை உருவாக்குவது முக்கியமானதாகும்.

அவர்கள் பரஸ்பர நலன்கள் தொடர்பான பிரச்சினைகளை கலந்துரையாடலாம். மிக விரிவாக விபரங்களை கலந்துரையாட எனக்கு அதிகாரம் இல்லை. கடற்கரையை அண்மித்த கடற்பரப்பிலோ அல்லது நாட்டின் நிலப்பரப்பிலோ சிறிய அணுமின் நிலையமொன்றினை நிறுவுவதற்கு தயாராக இருப்பதாக நாங்கள் ஏற்கனவே அறிவித்துள்ளோம். இந்த நிலையம் 110 மெகாவாட் திறனை அல்லது அதற்கு அதிகமான திறனைக் கொண்டதாக இருக்கலாம். எனக்கு தொழில் நுட்ப ரீதியாக தெரியாது. இது நிபுணர்களைப் பொறுத்தது.

**இது உங்கள் இறையாண்மையின் முடிவு. ரஷ்யாவுடன் ஒத்துழைக்க விரும்புகிறார்களா அல்லது ஏனைய நாடுகளுடன் ஒத்துழைக்க விரும்புகிறார்களா என்பதை இலங்கை அரசாங்கம் மட்டுமே தீர்மானிக்க முடியும். நாங்கள் எந்தவித அழுத்தமும் கொடுக்கவில்லை.**

நாங்கள் நம்பிக்கையூட்ட மட்டுமே முயற்சிக்கின்றோம். அணுமின் நிலையங்களை நிர்மாணிப்பதில் ரோசாட்டம் உலகில் முன்னணியில் உள்ளது. உங்கள் அண்டை நாடுகளுடன் – முதலில் இந்தியா மற்றும் வங்கதேசத்துடன் – எங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு உள்ளது. எங்கள் ஒத்துழைப்பை சரியான நடைமுறையில் நாங்கள் தொடங்கினோம்.

மியான்மாருடன் எங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு உள்ளது. பெலருஸ், ஹங்கேரி, எகிப்து, துருக்கி மற்றும் ஈரானுடன் எங்களுக்கு ஒத்துழைப்பு உள்ளது. ஆகவே நாங்கள்தான் முன்னணியில் இருக்கின்றோம்.

கேள்வி: என்ன மாதிரியான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றீர்கள்? இது பங்களாதேஷிலும் இந்தியாவிலும் நீங்கள் செய்து கொண்டிருப்பதைப் போன்ற ஒரு மாதிரியா?

பதில்: இது நிபுணர்களிடையேயான பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தது. முதலாவதாக, தேவையான சூழ்நிலையையும் தேவையான வரையறைகளையும் நாங்கள் உருவாக்க வேண்டும். இங்கு வருகை தரும் எங்கள் ரஷ்ய தூதுக்குழுவுக்கு நீங்கள் பேசுவதற்கு அழைப்பினை விடுப்பீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். பேச்சுவார்த்தைகளுக்கு நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

கேள்வி: இருதரப்பு கலந்துரையாடல்களின் முக்கிய கூறுகளில் அல்லது அம்சங்களில் தற்போது இதுவும் ஒன்றா?

பதில்: ஓம். சர்வதேச ஒப்பந்தங்களில் இணைவதற்கு நீங்கள் அந்தந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட வேண்டும் என்பதால், பந்து உங்கள் எல்லைக்குள் உள்ளது என்று எனது பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில் நான் கூறினேன். அது பௌதீகப் பாதுகாப்பு மற்றும் ஏனைய சிலவற்றைப் பற்றியது. இந்த அமைப்பில் உள்ள எங்கள் சகாக்கள் மற்றும் வெளியுறவு மந்திரிகளுக்கு இது தெரியும்.

வியன்னாவில் உள்ள IAEA (சர்வதேச அணுசக்தி அமைப்பு) உடன் உங்கள் நாடு மிகவும் பயனுள்ள வகையில் ஒத்துழைப்பைத் தொடர்வது மிகவும் முக்கியம்.

கேள்வி: பூகோள தெற்கில் இலங்கை ஒரு வகையான காத்திரமான பாத்திரத்தை வகிக்க முயற்சிக்கின்றது. வெளியுறவுக் கொள்கை தெளிவாக ஆசியாவை மையமாகக் கொண்டது என்று ஜனாதிபதி கூறுகிறார். எனவே, ரஷ்யா உண்மையில் இதனை எவ்வாறு பார்க்கின்றது?

பதில்: இது மிகவும் சாதகமானது, ஏனென்றால் இலங்கை வரலாற்று ரீதியாக எங்கள் நட்பு நாடுகளில் ஒன்றாகும். இலங்கையுடன் எமக்கு எந்தப் பிரச்சினையும் இருந்ததில்லை. பல இலங்கையர்கள் ரஷ்யாவிலும் முன்னாள் சோவியத் பல்கலைக்கழகங்களிலும் பட்டம் பெற்றவர்கள். அதற்காக நாங்கள் மிகவும் பெருமைப்படுகின்றோம். அவர்கள் இப்போது மிக முக்கியமான பதவிகளை – சிலர் அரசமைப்புகளிலும், மற்றவர்கள் தனியார் நிறுவனங்களிலும் – வகித்து வருகின்றனர் ரஷ்யாவிற்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அவை மிகவும் உதவிகரமாக உள்ளன.

**உக்ரைன் விடயத்தில், இலங்கையும் பூகோள தெற்கின் பெரும் பகுதியும் நடுநிலை மற்றும் சமநிலையான நிலைப்பாட்டை கடைப்பிடித்துள்ளார்கள் என்பதை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம். பொருளாதாரத் தடைகள் எதிர்மறையானவை என்பதால் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளில் கொழும்பு இணையவில்லை. இது சரியானதே. நடுநிலையான, சமநிலையான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கும் சில நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளில் இணையவில்லை.**




கேள்வி: இரு நாட்டு ஜனாதிபதிகளும் சந்திக்க உண்மையில் ஏதாவது வாய்ப்பு உள்ளதா?

பதில்: சமீபத்தில் சீனாவில் 'பெல்ட் அண்ட் ரோடு' (BRI) உச்சி மாநாட்டின் போது ஒரு நல்ல வாய்ப்பு இருந்தது. எனக்குத் தெரிந்த வரையில், அவர்கள் கைகுலுக்கிக் கொண்டார்கள். அதிகம் பேசவில்லை. அவர்களின் நிகழ்ச்சிநிரல்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு, இரு ஜனாதிபதிகளும் கருமமாக இருந்ததாலும் அவர்கள் பேசவில்லை என்று நான் நினைக்கிறேன்.

அடுத்த முறை. ஒருவேளை ஏதாவது சர்வதேச கூட்டம் நடக்கலாம். பிரிக்ஸ் (BRICS) அமைப்பின் தற்போதைய தலைவராக ரஷ்யா வந்துள்ளது உங்களுக்குத் தெரியும். பிரிக்ஸ் அமைப்பு பெரிதாகிவிட்டது. பிரிக்ஸ் அமைப்பில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், எத்தியோப்பியா, எகிப்து என பல நாடுகள் இணைந்துள்ளன.

கேள்வி: பிரிக்ஸ் அமைப்பில் இணைய விருப்பம் கொண்டுள்ளதாக இலங்கையும் அறிவித்துள்ளது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: எதுவித பிரச்சனையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நீங்கள் சில அளவுகோல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இலங்கையைப் பொறுத்தவரை, இது ஒரு பிரச்சினை அல்ல என்று நான் நினைக்கிறேன். அனைத்து பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுடனும் இலங்கை நட்புறவைப் பேணி வருகின்றது.

பிரிக்ஸ் மிகவும் பிரபலமான சர்வதேச அமைப்பாக மாறியுள்ளது. எங்கள் பொருளாதாரங்களின் ஒருங்கிணைப்பையும், பல துறைகளில் எங்கள் ஒத்துழைப்பையும் நாங்கள் தொடருவோம். இது சீனா, இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா போன்ற பல சக்திவாய்ந்த நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

கேள்வி: இலங்கையுடன் ரஷ்யா ஒத்துழைக்குமா?

பதில்: நிச்சயமாக. ஷங்காய் கூட்டுறவு அமைப்பில் இலங்கையின் மிகவும் காத்திரமான பங்களிப்பை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இலங்கை தற்போது இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் (Indian Ocean Rim Association - IORA) தலைவராக உள்ளது. நாங்கள் பேச்சுவார்த்தை கூட்டாளி நாடாகவும் இருக்கிறோம். சில கூட்டங்கள் மற்றும் சில அமர்வுகள் இருக்கும். ரஷ்யாவிலிருந்து வரும் எங்கள் பிரதிநிதிகள் பங்கேற்பதற்கு தயாராக உள்ளனர். கடந்த ஒக்ரோபரில் அமைச்சர்கள் கூட்டம் நடைபெற்றது.

கேள்வி: உங்கள் பார்வையில், ரஷ்யா – உக்ரைன் போர் எவ்வளவு காலம் நீடிக்கும்?

பதில்: ரஷ்யாவின் வல்லமையை உக்ரைனுடன் ஒப்பிட முடியாது

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**


# இங்கிருந்து எங்கே...?

இலக்கிய உலகிலே காலத்துக்குக் காலம் புதிய பிரச்சனைகள் தோன்றுவதுண்டு. அதேபோல, காலங்காலமாக எழுப்பப்படும் சில வினாக்களும் உண்டு. அத்தகைய 'நித்தியமான' வினாக்களில் ஒன்று 'இலக்கியம் எதற்காக?' என்பதாகும். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப இவ்வினாவிற்கு வேறுபடும் விடைகள் அளிக்கப்படலாம். எனினும் இலக்கியம் சம்மந்தமான அடிப்படை கேள்விகளில் மேலே குறிப்பிட்டதும் ஒன்றாகும்.

இலக்கியத்தின் குறிக்கோள் பற்றி கருத்து ரீதியாக விடை கூறுவதிலும் பார்க்க, இலக்கிய கர்த்தாக்களின் நோக்கையும் போக்கையும் விவரிப்பதனால் விளக்கம் தேடுதல் விரும்பத்தக்கதாகும். தனிப்பட்ட ஒரு எழுத்தாளன் காதல், புகழ், பணம், சமய நம்பிக்கை, அரசியல் ஈடுபாடு முதலிய பல காரணங்களில் ஒன்றோ, பலவோ உந்துவதால் எழுதுகிறான் எனக் கூறலாம். எனினும் எழுத்தாளனை பொதுவாக நோக்குமிடத்து மூன்று நிலைப்பாடுகளை கவனிக்கலாம்.

எழுத்தாளன் தனித்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப்பிராணி. சமுதாயத்தில் எல்லாக் காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும், இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான். இந்நிலையில் மூன்று நிலைப்பாடுகளை பொதுவாக எழுத்தாளரிடையே காணக்கூடியதாய் உள்ளது.

ஒரு பிரிவினர், பிரச்சினைகளையும், முரண்பாடுகளையும், துன்ப துயரங்களையும் எதிர்நோக்காதவராய், அவற்றுடன் சம்பந்தப்படாமல், இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு, அதற்கு இயைய கற்பனைச் சம்பவங்களையும், கதைகளையும், உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குபவர்கள். இவர்களில் சிலர் கூறும் வாதம் சுவையானது. "வாழ்க்கை பலருக்குத் துன்பமாயுள்ளது என்பதை நாமும் அறிவோம். எனவே துன்பமயமாய் அமைந்த வாழ்க்கைக்கு மேலும் துயர் கூட்டுவதுபோல, சஞ்சலத்தையும், அவலத்தையும், அருவருப்பையும் இலக்கியத்தில் எதற்காகப் புகுத்த வேண்டும்? ஆகவே, துன்பத்தின்



மத்தியில் துளிநேர மாற்றத்தை அளிப்பதாய், கற்பனையிலேனும் களிப்பையும் கவர்ச்சியையும் நாம் கொடுத்து உதவ விரும்புகிறோம் முயல்கிறோம்." இவ்வாறு அவர்கள் தமது நிலைப்பாட்டிற்குச் சமாதானமும் விளக்கமும் கூறுவர். நடைமுறையில் பெரு வணிக நிறுவனங்களின் குரலாகவே இது இருப்பதைக் கண்டு கொள்ள அதிக நேரம் பிடிக்காது.

## *கலாநிதி க. கைலாசபதி*

**தென்னிந்தியாவிலே பெரும் தொழிற்துறையாக வளர்ந்துள்ள சினிமா இத்தகைய வாதத்தின் துணையுடனேயே, 'அபினி'யாக மக்களுக்கு ஊட்டப்படுகிறது என்பதனை நாம் அறிவோம். பல இலட்சக் கணக்கில் வெளியிடப்படும் 'குமுதம்', 'ஆனந்த விகடன்' முதலிய சஞ்சிகைகளும் 'துன்பப்படும் மக்களுக்கு மகிழ்வூட்டுவதற்காகவே' வெளிவருகின்றன எனக் கூறப்படுவதுண்டு. "எனது குறிக்கோள் மக்களை மகிழ்விப்பது ஒன்றே" என்றுதான் ஜெமினி அதிபரும் ஆனந்தவிகடன் வெளியீட்டாளருமான வாசன் எப்பொழுதும் கூறிவந்தார்.**

இப்பிரிவினர் அனைவருமே பெருவணிகர் என்றோ, திட்டமிட்டு மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்போர் என்றோ நாம் கூற வேண்டுவதில்லை. இலக்கியம் தூய்மையானது, பேருணர்ச்சிகளுக்கு வாகனமாய் அமைய வேண்டியது, கற்பனை சார்ந்ததாய் இருக்க வேண்டியது என்று உண்மையாகவே நம்பும் எழுத்தாளரும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும் சமூகப் பிரச்சனைகளைப் பிரதிபலிக்காமல் மானசீக உலகில் இருந்துகொண்டு எழுதுவோர் ஒரு பிரிவினர் எனலாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்போது, மன்னராட்சிக் காலங்களிலும், நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பிலும், பாராட்டப்பெற்ற 'அவை' இலக்கியங்கள் இத்தகையன என்று பொதுப்படக் கூறலாம். குறிப்பாக உயர் மட்டத்தினரின் காதல் வாழ்க்கை, இன்பக் கேளிக்கை, உல்லாசப் பொழுதுபோக்கு என்பவற்றை மையமாகக் கொண்டு எத்தனையோ சிற்றின்ப நூல்கள் தோன்றின. இவற்றின் மிச்ச சொச்சத்தை நவீன காலத்திலே ஐயத்துக்கிடமின்றி நாம் காணக் கூடுமாயினும், முதலாளித்துவ சமுதாயத்திலே, வாழ்க்கையை, முற்றுமுழுதாகப் புறக்கணிக்கும் இலக்கியங்கள் தோன்றுவது குறைவு என்றே கூற வேண்டும்.

இன்னொரு பிரிவினர், மேலே நாம் விவரித்த சமுதாய முரண்பாடுகளையும் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு நோக்கி, அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பவர்கள். சமுதாயத்திலே பரவலாகக் காணப்படும் துன்ப துயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அனுதாபத்துடன் பார்க்கும் இப்பிரிவினர், முந்தைய பிரிவினரோடு ஒப்புநோக்குமிடத்து தம்மைச் சுற்றியுள்ள யதார்த்தத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதில் ஐயமில்லை. எனினும் சமுதாய நிலைமைகளை பிரதிபலித்தாலே போதும் என்னும் எண்ணம் இவர்களில் பெரும்பாலானோரை பற்றிக் கொண்டிருக்கிறது என்பதிலும் ஐயமில்லை. அதாவது முதற்பிரிவினர் பிரச்சனைகள் இருப்பதையே எழுத்தில் பிரதிபலிக்கவில்லை, அதனால் அப்பிரச்சனை இலக்கியத்திற்கு உகந்த உரிய பொருட்கள் அல்ல என்னும் கருத்தைக் கொண்டவராய் உள்ளனர். இரண்டாவது பிரிவினரோ இதற்கு மாறாக, சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம் பெறுவதை ஏற்றுக் கொள்கின்றனர். எனினும் தமது கடமை, அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்தரித்து விடுவதே என்று கருதுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கையும் இவர்களுக்கு உண்டு.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது, நிலப்பிரபுத்துவ

சமுதாயத்தை அடுத்து வந்துள்ள முதலாளித்துவ சமுதாய அமைப்பில், சந்தைக்குப் பொருள் தயாரிப்போருள் ஒருவனாக மாற்றப்பட்டுள்ள எழுத்தாளன், வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையில் வேலைத் தட்டுப்பாடு, மோசடி, ஏற்றத்தாழ்வு, சுரண்டல் முதலிய கொடுமைகளை அனுபவரீதியாகவும், அறிவுரீதியாகவும் ஓரளவு கண்டு, அவற்றை இலக்கியத்திலும் பிரதிபலிக்கிறான். ஆயினும், இவற்றை எல்லாம், அவன் எழுத்தாளன் என்னும் வகையில் தனிப்பட்ட முறையிலும், தனிப்பட்ட மாந்தரின் அவலங்களாகவுமே எழுதுகிறான். இதன் விளைவாக, துன்ப துயரங்களை கண்டு கண்ணீர் வடித்து, இரங்கி ஏங்கும் நிலைக்குப் பெரும்பாலும் அவன் தள்ளப்படுகிறான். யதார்த்தத்தைக் கண்டு மனம் நொந்து வெதும்புகிறான் சில சமயங்களில் சினங்கொண்டு சீறவும் செய்கிறான் எனினும் அதற்கு மேல் அவன் நோக்கு பெரும்பாலும் போவதில்லை.

நவீன உலகில் பரவலாகப் பொதுமைச் சிந்தனைகளும், சோஷலிசக் கருத்துக்களும் நிலவுவதால், அவற்றாலும் இரண்டாம் பிரிவு எழுத்தாளர்கள் சிலர் ஈர்க்கப்படுவதுண்டு. எனினும் அவர்களிடத்தும், இலக்கியத்தை 'பிரச்சாரம்' ஆக்குதல் கூடாது என்னும் சில ஐயங்களும், அச்சங்களும் ஆழமாக வேரூன்றி இருப்பதைக் காணலாம்.

பல்வேறு வரலாற்றுக் காரணங்களினால், கடந்த கால் நூற்றாண்டு காலத்திலே, ஈழத்துத் தமிழிலக்கியத்தில் இப்போக்கு கணிசமான தாக்கத்தை உண்டாக்கியிருக்கிறது எனலாம்.

எனினும் சமீப காலத்தில் பல இளைஞர்களிடையே, குறிப்பாக கிராமப் பக்கங்களில் வாழும் எழுத்தாளர்களிடையே, பிரச்சினைகளை இன்னும் நுணுக்கமாகவும், தூலமாகவும் ஆராய்ந்து அவற்றுக்குப் பரிகாரம் கூறும் இலக்கியப் படைப்புக்கள் வேண்டும் என்னும் கருத்து வேகம் பெற்று வருதலைக் கவனிக்கக் கூடியதாய் உள்ளது. இதற்குத் தருக்கரீதியான காரணங்களும் இல்லாமல் இல்லை. மனிதாபிமான உணர்வுடன் நடைமுறைப் பிரச்சினைகளை சித்தரித்தல் ஏற்றதே என்னும் கோட்பாடு ஓரளவு வழக்காகிய பின், அடுத்து என்ன? என்னும் வினா எழுதல் இயல்பே. அது மட்டுமன்று. பிரச்சினைகளை மேலும் கூர்ந்து நோக்கி, ஒவ்வொன்றின் காரண காரிய தொடர்புகளை விளங்கிக் கொண்டு எழுதும்போது, அவற்றை நீக்க வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழிவகைகளையும் விவரித்தல் தவிர்க்க இயலாததே. நோயை நுணுக்கமாக விளக்கி விவரித்தால் மட்டும் போதுமா? நோயாளியின் மீது இரக்கப்பட்டால் மட்டும் போதுமா? நோயின் வரலாற்றை ஆதியோடு அந்தமாகக் கூறினால் மட்டும் போதுமா? நோய் தீர மருந்தும் மார்க்கமும் வேண்டாமா?

இன்னும் ஒரு காரணமும் உண்டு. ஒரு காலகட்டத்தில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் புதுமையின் பெயரிலும் புரட்சியின் பெயரிலும் இலக்கியத்தில் புகுத்திய பொருள்களும் சித்தரிப்பு முறைகளும் இன்று வர்த்தக வெளியீடுகளிலும், சாதாரணமாக இடம்பெறத் தக்கவையாகி விட்டன. 'அரங்கேற்றம்' போன்ற திரைப்படமும் 'யதார்த்தப்' படைப்பு எனப் பலர் கருதுமளவிற்கு, பொருள் எடுத்தாளப்படுகிறது. அதாவது இனம் காண்பது கடினமாகி விட்டது எனலாம்.

இந்நிலையில், சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகளையும், துன்ப துயரங்களையும், போராட்டங்களையும் உதிரியான தனிமனிதர்களின் பிரச்சினைகளாக மாத்திரம் கண்டு காட்டாமல் அவற்றை வர்க்கங்களுக்கு இடையே நிகழும் போராட்டத்தின் வெளிப்பாடுகளாக காண்பது இன்றியமையாததாக ஆகிறது. இரண்டாவது பிரிவிலே தொடங்கியபோதும், வர்க்க அடிப்படையிலே பாத்திரங்களை அணுகாமல் விசேஷமான தனிப்பிறவிகளை இலக்கிய மாந்தராகக் கொண்டமையாலேயே, ஒரு காலத்து 'முற்போக்கு' எழுத்தாளர் ஜெயகாந்தன், இன்று 'பிரம்மோபதேசம்' செய்பவராக உருமாறியுள்ளார். இது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரது தனிப்பட்ட பலவீனம் மட்டுமன்று, அவன் பற்றிக் கொண்டிருந்த இலக்கியக் கோட்பாட்டிலே உள்ளார்ந்த பலவீனமாய் இருந்த அம்சத்தின் பரிணாமம் என்றும் கூறலாம் அல்லவா? ஜெயகாந்தனை விதிவிலக்கான 'வில்லனாக' நாம் விவரிக்க வேண்டியதில்லை. பல எழுத்தாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எடுத்துக்காட்டு என்றே கொள்ள வேண்டும். வர்க்க ஆய்வின் அடிப்படையில், தூலமான சந்தர்ப்பங்களில் பாத்திரங்களை சித்தரிக்கத் தவறும் எந்த எழுத்தாளரும் ஜெயகாந்தன் ஆவதற்கு அதிக நாள் பிடிக்காது.

இதை இன்னொரு வகையாகவும் நோக்கலாம். ஜெயகாந்தனது எழுத்தில் இன்றும் நுணுக்க விவரங்களைக் கூறும் 'யதார்த்த'ப் பண்பு, அதாவது இயற்கையாகப் பாத்திரங்களைத் தீட்டும் ஆற்றல் குறைவின்றியே இருக்கிறது. மனிதாபிமான உணர்வும் இல்லையென்று அடித்துக் கூற இயலாது. ஆயினும் சமுதாய மாற்றத்துக்கு ஆதரவு தருபவராக அவர் இன்று இல்லை. எனவே பிழை எங்கு உள்ளது என்று கவனமாய்த் தேட வேண்டும்.

இந்த இடத்திலேதான் மூன்றாவது பிரிவினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிப்பது மட்டுமின்றி, அதனை மாற்றி அமைக்கும் பணியில் பங்குபற்றுவதுடன், அப்பணி வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப் பொருளாகத் துணிந்து ஏற்றுக் கொள்வதும் இன்றைய தேவையாகும் என இப்பிரிவினர் வற்புறுத்துகின்றனர். இவ்வாதத்தை இலகுவில் ஒதுக்கிவிட முடியாது. அனுபவமும் அனைத்துலகப் போக்கும் இவ்வாதத்துக்கு அரண் செய்வனவாகவே உள்ளன.

வரலாற்று அடிப்படையில் நோக்கும்பொழுது, தொழிலாளர், விவசாயிகள் வர்க்கத்திலிருந்து தோன்றும் கலை இலக்கியக் கோட்பாட்டின் காத்திரமான குரல் இது என்பது வெளிப்படை. எதிர்காலத்தை மாற்றி அமைக்கும் பெரும் பணிக்கு அவர்கள் தலைமை தாங்குபவர்கள் ஆதலின் அக்குரல் வலிமை உடையது என்பதில் ஐயமில்லை. இக்கோட்பாடு இலக்கியத்தில் செயற்படுகையில் சிறப்பான பிரச்சினைகள் தோன்றும் என்பது உண்மை. கலையழகு, உருவம், நம்பகத்தன்மை, ஏற்புடைமை, மொழி நயம் முதலிய பல்வேறு அம்சங்கள் இணைதல் வேண்டும். புதிய நெறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். ஆயினும் இவை எதிர்நோக்க வேண்டிய சவால்களே. இந்தக் காலகட்டத்தில் இன்று ஈழத்து எழுத்தாளர்கள் வந்து நிற்கின்றனர். தருக்கரீதியாக வளர்ந்து வந்துள்ள இப்போக்கை தக்கபடி முன்னெடுத்துச் செல்வதிலேயே எமது எதிர்காலம் தங்கியுள்ளது.

(இக்கட்டுரை 1974 ஆம் ஆண்டு சித்திரை மாதம் முதலாவது 'தாயகம்' இதழில் வெளியாகியது. எனவே அக்காலகட்டத்து கலை, இலக்கிய விவாதங்களை இக்கட்டுரை பிரதிபலிக்கின்றது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.)

# பூமியில் நெருப்பு எவ்வாறு உருவாகியது?

பூமிக்குப் பல சிறப்புகள் இருக்கின்றன. பூமியில் நீர் இருக்கிறது, உயிர் இருக்கிறது. இவற்றுடன் பூமியில் மட்டும்தான் நெருப்பு இருக்கிறது. இங்கே உங்களுக்கு ஒரு கேள்வி வரலாம். வேறு கோள்களில் எரிமலை இருக்கிறதே? மின்னல் வெட்டுகிறதே? அவை எல்லாம் நெருப்பு இல்லையா? ஏன் நமது நட்சத்திரமான சூரியன்கூட எந்நேரமும் எரிந்துகொண்டேதான் இருக்கிறது. அதுவும் நெருப்புதானே என்று உங்களுக்குத் தோன்றலாம். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் அவற்றில் எதுவும் நெருப்பு கிடையாது.

ஐதரசன் தனிமம் அணுச் சேர்க்கையில் ஈடுபடும்போது வெப்பமும் ஒளியும் வெளியாகின்றன. இதைத்தான் நாம் நட்சத்திரங்கள் என்கிறோம். ஆனால், அவை நெருப்பு கிடையாது. அதேபோல எரிமலையில் இருந்து வெளிவருவதும், மின்னல் வெட்டும்போது தோன்றுவதும் நெருப்பு கிடையாது. அங்கும் வெப்பம் வெவ்வேறு வடிவில் வெளியாகிறது அவ்வளவுதான். பிறகு நெருப்பு என்பது என்ன?

நெருப்பு என்பது எரிதல் (Combustion) எனும் இரசாயன வினையால் உருவாவது. நெருப்பு உருவாவதற்கு இரண்டு பொருள்கள் தேவை. ஒன்று ஒட்சிசன். இன்னொன்று எரிபொருள். எரிதல் நிகழும்போதும் ஒட்சிசனும் எரிபொருளும் இணைந்து, ஆற்றல் வெப்பமாகவும் வெளிச்சமாகவும் வெளியாகும். இதைத்தான் நாம் நெருப்பு என்கிறோம்.

பல நூறு கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியில் தனித்த ஒட்சிசன் கிடையாது. அதனால், நெருப்பும் கிடையாது. பிறகு முதல் நெருப்பை உருவாக்கியது யார்? அதைச் செய்தவை உயிர்கள். உயிர்கள் தோன்றிய பிறகுதான் பூமியில் ஒட்சிசன் உருவானது.

ஆரம்பத்தில் சயனோ பாக்டீரியா (Cyanobacteriota) என அழைக்கப்படும் ஒரு வகை பாக்டீரியாக்கள்தாம் கடலில் இருந்துகொண்டு ஒளிச்சேர்க்கையில் ஈடுபட்டு ஏராளமான ஒட்சிசனை உருவாக்கின. இந்த ஒட்சிசன் உயிர்கள் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்ததோடு, நெருப்பு உருவாவதற்கும் காரணமாக அமைந்தது.



இந்த நிகழ்வை நாம் மாபெரும் ஒட்சிசனேற்ற நிகழ்வு (The Great Oxygenation Event) என்கிறோம். ஆனால், ஆரம்பத்தில் உருவான ஒட்சிசன் வளிமண்டலத்தில் தங்கவில்லை. பூமியின் மேலோட்டில் இருந்த இரும்பு, ஒட்சிசனை உறிஞ்சிக்கொண்டது. பின் ஒருகட்டத்திற்கு மேல்தான் ஒட்சிசன் வளிமண்டலத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தங்கத் தொடங்கியது.

**நன்மாறன் திருநாவுக்கரசு**

ஆனால், அப்போதும் நெருப்பு உருவாகவில்லை. காரணம் ஒட்சிசனுடன் இணைந்து பற்றிக்கொள்ள எரிபொருள் வேண்டுமல்லவா? அதற்கு எங்கே செல்வது? இந்தச் சிக்கலையும் உயிர்கள்தாம் தீர்த்து வைத்தன.

எரிதல் நடைபெற எரிபொருள் தேவை. ஆனால், எல்லாப் பொருள்களும் எரிபொருளாகிவிட முடியாது. எரிதல் நடைபெற கார்பனும் ஐதரசனும் அதிக அளவில் பிணைந்த மூலக்கூறுகள் எரிபொருளில் இடம்பெற வேண்டும். இத்தகைய அமைப்பு தாவரங்களின் உடலில் உள்ள செல்லுலோஸ் (Cellulose) எனும் சேர்மத்தில் அதிக அளவு இருக்கிறது. இதனால், தாவரங்கள்தான் முதல் எரிபொருளாக அமைந்தன.

முதன் முதலில் உயிர்கள் பரிணாமம் அடைந்து பாசித் திட்டுகள்போல முதல் தாவரங்கள் தோன்றின. பின் 43 கோடி ஆண்டுகளுக்கு முன்பு குழாய் போன்ற வடிவத்தில் நெமடோபைட்டுகள் (Nematophytes), பசிதேகா (Pacytheca) போன்ற தாவரங்கள் தோன்றின. பிறகு 9 மீட்டர் உயரத்தில் வளரக்கூடிய புரோட்டோடாக்சைட் (Prototaxites) எனும் ஆதித் தாவரம் தோன்றியது. இந்தத் தாவரங்கள் ஒளிச்சேர்க்கையில் ஈடுபடவில்லை. அவற்றுக்கு இலைகள், வேர்கள், விதைகள் என எதுவும் கிடையாது. ஆனால், அவை எளிதில் பற்றி எரியக் கூடியவையாக இருந்தன.

இந்த புரோட்டோடாக்சைட் தாவரங்களில் மின்னல் தாக்கியபோது அதன் தூண்டுகோலாக முதல் நெருப்பு உருவாகியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். புரோட்டோடாக்சைட் தாவரங்களின் புதைபடிமங்கள்தாம் முதன்முதலில் எரிந்த நிலையில் நமக்குக் கிடைக்கின்றன.

பின் புவியில் ஏற்பட்ட மாற்றத்தால் பாஞ்சியா (Pangea) எனும் கண்டம் உருவாகி, வெவ்வேறு வகைத் தாவரங்கள் தோன்றிப் பரவின. இந்தக் காலகட்டத்தை நாம் கார்:.போனிபெரஸ் காலகட்டம் (Carboniferous Period) என்கிறோம். இந்தக் காலத்தில் உருவான தாவரங்களால் அதிகப்படியான ஒளிச்சேர்க்கை நடைபெற்றது. இதனால், ஒட்சிசன் உற்பத்தியும் அதிகரித்தது. அந்தக் கட்டத்தில் வளிமண்டலத்தில் 30~35% ஒட்சிசன் இருந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், அதிகப்படியான ஒட்சிசன் உருவானதால் அடிக்கடி நெருப்புப் பற்றியது. அந்தக் காலகட்டத்தில் நெருப்புச் சூறாவளி எல்லாம் சாதாரணமாக உருவாகின.

இதுபோன்ற சூழல், தாவரங்களை அதிக அளவில் பாதித்ததால் ஜீராசிக் (Jurassic) காலகட்டத்தில் சில தாவரங்கள் நெருப்பு பற்றினாலும் அதன் உடல் பாதிக்காதவாறு அடர்த்தியான பட்டைகளோடும் நெருப்பு தரையிலிருந்து மேலே பரவாத வகையில் உயரத்தில் கிளைகளோடும் பரிணமிக்கத் தொடங்கின. அதன்பின் தோன்றிய புற்கள் நெருப்பைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தன.

புற்கள் இறந்தவுடன் அவை அகற்றப்படாமல் இருந்தால், புதிய தண்டுகள் முளைக்க முடியாது. இங்கே நெருப்புதான் இறந்த புற்களை எரித்து அகற்றுகிறது. சாம்பலான புற்களின் ஊட்டச்சத்து மீண்டும் நிலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விதைகள் முளைக்க உதவுகின்றன. பசும்புற்கள் நெருப்பால் பாதிக்கப்பட்டாலும், அவற்றின் முக்கியப் பாகங்கள் நெருப்பு பாதிக்காத வகையில் பூமிக்கு அடியில் இருக்கும்படி பரிணமித்துள்ளன. இவ்வாறு நெருப்பு, புற்கள் வளர வழிவகுக்கிறது.

இப்படிப் புல்வெளிகள் பரவத் தொடங்கியதுதான், ஆப்ரிக்காவில் நமது மூதாதைக் குரங்குகள் (Hominin) உருவாக வழிவகுத்துக் கொடுத்தது என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். இதனால், மனிதர்கள் உருவாகவும் நெருப்பு மறைமுகப் பங்காற்றி இருக்கிறது.

இவ்வாறு முதலில் நெருப்பு உருவாக உயிர்களும், பிறகு உயிர்கள் பெருக நெருப்பும், மாற்றி மாற்றி உதவிக்கொண்டன. ஒருவேளை பூமியில் உயிர்கள் மட்டும் தோன்றாமல் இருந்திருந்தால், நெருப்பு உருவாகாமலேயே இருந்திருக்கும். இன்றைக்கு இருக்கும் தொழில்நுட்பத்தில் நம்மால் ஒரு நொடியில் வீட்டில் நெருப்பை உருவாக்கிவிட முடியும். ஆனால், முதல் நெருப்பு உருவாக நாம் கோடிக்கணக்கான ஆண்டுகள் காத்துக் கிடக்க வேண்டியிருந்தது என்பதுதான் உண்மை.

---

**முன்பக்கத்தொடர்ச்சி...**

கைகளுக்கு மாறியதே தவிர, நாட்டில் அமைந்திருந்த முதலாளித்துவ பொருளாதார மற்றும் நிர்வாக அமைப்புகளில் எந்தவிதமான மாற்றமும் நிகழவில்லை.

அதன் காரணமாகத்தான் தீவிர ஏகாதிபத்திய சார்புக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (ஐதேக) ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் 1977 இல் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியதுடன் 17 வருடங்கள் தொடர்ந்து ஆட்சியில் இருந்து மிகவும் மோசமான எதேச்சாதிகாரம் நிறைந்த அரசியல் அமைப்பொன்றைப் புதிதாகக் கொண்டு வந்ததுடன், 'திறந்த பொருளாதாரம்' என்ற பெயரில் நாட்டை ஏகாதிபத்திய சக்திகளின் வேட்டைக்காடாகவும் மாற்றியது.

அந்த ஆட்சியின் மக்கள் விரோதச் செயற்பாடுகளால் வெறுப்படைந்த மக்கள் பின்னர் ஐதேக வுக்கு எதிரான பல ஆட்சி மாற்றங்களைச் செய்தாரெனினும், நாடு எதிர்நோக்கி வந்த எந்தவொரு அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவில்லை. அதன் உச்சகட்ட விளைவாக 2022 இல் மக்களின் பரந்தளவிலான எதிர்ப்புப் போராட்டங்கள் (அந்நிய சக்திகளின் பின்னணி இருந்த போதிலும்) உருவாகின. அதனால் ஆட்சி மாற்றமும் உருவாகியது.

ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமும், அதற்கு சில வருடங்களுக்கு முன்னர் இருபெரும் முதலாளித்துவக் கட்சிகளான ஐதேக மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றில் ஏற்பட்ட பிளவுகளும், இலங்கையின் வர்க்க சக்திகள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்களையும் புதிய அணி சேர்க்கையையும் எடுத்துக் காட்டுகின்றது.

தற்போதைய இலங்கையின் வர்க்க மற்றும் அரசியல் வரைபடத்தை எடுத்துப் பார்த்தால், 1950 களில் இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தில் ஏற்பட்ட பிளவுகள் மறைந்து, ஒரு வகையான முதலாளித்துவ வர்க்கச் சேர்க்கை உருவாகியுள்ளதைக் காண முடிகிறது. ஐதேக தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுன இன்றைய அரசு அதற்கு ஒரு உதாரணம். அதேநேரத்தில் இடதுசாரி சக்திகள் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ள நிலையையும் காண முடிகிறது.

பொதுவாக இலங்கையின் இன்றைய பிரதான அரசியல் சக்திகள் எல்லமே மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளினதும், இந்திய பிராந்திய விஸ்தரிப்புவாத சக்திகளினதும் விசுவாசிகளாக மாறியுள்ள நிலைமையே காணப்படுகின்றது. இது ஒரு புதிய நிலைமை. ஒரு வகையில் இதை ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தின் விளைவு என்றும் சொல்லலாம்.

எது எப்படி இருந்த போதிலும், இலங்கை 1948 இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் அடைந்த பின்னர் எதிர்நோக்கிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எவையுமே தீர்க்கப்படவில்லை. இதிலிருந்து ஒரு உண்மை புலனாகின்றது. அதாவது, ஒரு நாடு அந்நியரிடமிருந்து விடுதலை பெறுவது மட்டும் மக்களின் முழுமையான விடுதலையாக அமையாது. அதுபோல விடுதலை அடைந்த நாட்டில் ஜனநாயகத்தின் பெயரால் பல கட்சிகள் மாறிமாறி ஆட்சிக்கு வருவதும் கூட மக்களின் விடுதலை ஆகாது. ஒரு முழுமையான சமூக மாற்றம் (மக்கள் ஜனநாயக) மட்டுமே உண்மையான மக்கள் விடுதலையாக அமைய முடியும்.

அந்த நிலைமை ஏற்படும் வரை இலங்கையில் கொண்டாடப்படுகின்ற சுதந்திர தினங்கள் அத்தனையும் ஆளும் முதலாளித்துவ சுரண்டும் வர்க்கத்தின் சுதந்திர தினங்களாகவே இருக்கும். எனவே வருடாவருடம் பெப்ருவரி 04 ஆம் திகதி கொண்டாடப்படும் சுதந்திர தினத்தில் மக்களுக்கு கொண்டாடுவதற்கு எதுவும் இல்லை என்பதே உண்மையாகும்.

---

இன்னொரு தேசத்தை ஒடுக்கும் எந்த தேசமும் சுதந்திர தேசமாக இருக்க முடியாது. **–எங்கெல்ஸ்**

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

பாசிச மோடி அரசு பொலிஸ் மற்றும் துணை இராணுவப் படைகளைக் கொண்டு விவசாயிகளின் மீது அடக்குமுறை செலுத்தி போராட்டத்தை தடுத்து நிறுத்தவும் ஆயத்தங்களைச் செய்திருந்தது, அத்தோடு விவசாயிகளை டெல்லிக்குள் நுழைய விடாமல் ஹரியானா–டெல்லி எல்லையிலே தடுத்து நிறுத்தவும் ஏற்பாடுகளைச் செய்திருந்தது,

ஹரியானா எல்லையில் சிமெண்ட் மற்றும் மணல் மூட்டைகளை கொண்டு தடுப்புகளை அமைத்துள்ளனர். தடுப்புகளை நகர்த்தி வைப்பதற்காக கிரேன்களையும் கொண்டுவந்து நிறுத்தியுள்ளனர். விவசாயிகள் தடுப்புகளை மீறி செல்ல முயன்றால் அவர்கள் மீது கண்ணீர் புகைகுண்டு வீசுவது, தண்ணீரை பீய்ச்சி அடிப்பது எனத் திட்டமிட்டிருந்தனர். கண்ணீர் புகை குண்டுகளை வீசி போராட்டத்தை கலைப்பதற்கான ஒத்திகையிலும் பொலிஸ் ஈடுபட்டிருந்தது.

மேலும், விவசாயிகள் மீது மிருகத்தனமான அடக்குமுறையை

செலுத்துவதற்கு சாதகமாக ஹரியானா – பஞ்சாப் எல்லையில் அமைந்திருக்கும் அம்பாலா, குருஷேத்ரா, கைதல், ஜிந்த போன்ற கிராமங்களில் பெப்ரவரி 11 காலை 6 மணியில் இருந்து பெப்ரவரி 13 இரவு 11.59 மணி வரை இணையம் மற்றும் எஸ்.எம்.எஸ். சேவைகளை துண்டித்திருந்தனர்.

மேலும், பிற மாநில விவசாயிகள் போராட்டத்தில் கலந்துகொள்வதை தடுப்பதற்காக, அந்தந்த மாநில பொலிசுத்துறை, போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக செல்லும் விவசாயிகளைக் கைது செய்து வருகின்றது. டெல்லி சலோ போராட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற கர்நாடக விவசாயிகளை பெப்ரவரி 15ந் திகதி போபால் இரயில் நிலையத்தில் வழிமறித்து தாக்கியுள்ளது அந்நகர பொலிஸ். மேலும், விவசாயிகளின் தொலைபேசிகளை பறித்து அடாவடித்தனத்தில் ஈடுபடுவதுடன் அவர்களை வலுக்கட்டாயமாகக் கைது செய்துள்ளது.

சண்டிகரில் விவசாயிகள் போராட்டத்தைத் தடுக்கும் வகையில், 60 நாட்களுக்கு 144 தடை உத்தரவை பிறப்பித்துள்ளது யூனியன் பிரதேச நிர்வாகம். டெல்லியை சுற்றியுள்ள டெல்லி– உத்தரப் பிரதேசம் மற்றும் வடகிழக்கு மாவட்ட எல்லைப் பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதுடன், உத்தரப்பிரதேசத்திலிருந்து டெல்லிக்குள் நுழையும் போராட்டக்காரர்களை தடுக்கும் விதமாக, டிராக்டர்கள், தள்ளுவண்டிகள், பேருந்துகள், ட்ரக்குகள், வணிக வாகனங்கள், தனிநபர் வாகனங்கள் மற்றும் குதிரைகள் போன்றவை டெல்லிக்குள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சம்யுக்தா கிசான் மோர்ச்சா என்ற விவசாயிகளின் கூட்டமைப்பும் ‘குடியரசு’ தினத்தன்று நாட்டின் 484 மாவட்டங்களில் மிகப்பெரிய டிராக்டர் பேரணியையும் பெப்ரவரி 16 அன்று கிராமப்புற கடையடைப்பு போராட்டத்தையும் நடத்தியது. இவ்வாறு தொடர் போராட்டங்கள் மூலம் பாசிசத்தை வீழ்த்துவதற்கான பாதை எது என்பதையும் விவசாயிகள் நமக்கு உணர்த்தி வருகிறார்கள்.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ராமர் கோவில் திறப்பு, இந்தியா கூட்டணியில் இருந்து நிதிஷ்குமாரை ஈர்த்துக் கொண்டது, ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் கைது, உத்தரகாண்டில் பொதுசிவில் சட்டம் அமுல் எனத் தொடர்ந்து தன்னுடைய நிகழ்ச்சிநிரல் கண்ணிகளை அமைத்து அதை ஒட்டி விவாதத்தை கட்டமைத்து வந்த ஆர்.எஸ்.எஸ்–பா.ஜ.க. கும்பலுக்கு, அந்த நிகழ்ச்சிநிரல் கண்ணியை உடைக்கும் விதமாக விவசாயிகளின் டெல்லி முற்றுகை போராட்டம் அமைந்துள்ளது.

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

தாய்வானிற்கு ஆயுதங்களை வழங்குவதிலும் உறுதியாக உள்ளது.

கடந்த ஆண்டு இரு நாடுகளுக்குமிடையே அதிகரித்த பதற்றங்களின் காரணமாக சீனாவுடனான உறவுகள் சிதைந்து, மணிலா தனது இராணுவ தளங்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியுள்ளது. பற்றன்ஸ் தீவுகளில் மக்கள் போக்குவரத்திற்கான துறைமுகத்தை உருவாக்க பிலிப்பைன்ஸ்ூடன் அமெரிக்க இராணுவம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த நவம்பரில், பிலிப்பைன்ஸ்ூம் அமெரிக்காவும் இதுவரை இல்லாத மிகப்பெரிய கூட்டு கடற்படைப் பயிற்சியின் போது, கடல் ரோந்துகளை நடத்துவதற்கான பயிற்சி தளமாகவும், ஏவுகணை நிறுவுவதற்கான இடமாகவும், பற்றன்ஸ் தீவுகளைப் பயன்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. சீனக் கடற்படையானது வழக்கமாக தாய்வானுக்கும் பற்றன்ஸ் தீவுகளுக்குமடையிலுள்ள பாஷி கால்வாயை (Bashi Channel) பயன்படுத்தி மேற்கு பசிபிக் பகுதிகளுக்குப் பயணம் செய்வதோடு, குறிப்பாக தாய்வானைச் சுற்றி அடிக்கடி ரோந்துப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளது.

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

என்பதால் சொல்வது கடினம் என்பது உங்களுக்குத் தெரியும். மேற்கத்தைய நாடுகளின் உதவியால் அவர்கள் இன்னும் எங்களை எதிர்க்கிறார்கள். ஆனால், அவர்களின் வல்லமை தீர்ந்து கொண்டு வருகின்றது என்று வைத்துக் கொள்வோம். அமெரிக்கர்களுக்கு தேர்தல்கள் உள்ளன. ஐரோப்பியர்களுக்கு பாரிய பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. ஜெர்மனியில் என்ன நடக்கிறது என்பதைப் பாருங்கள்! விவசாயிகளின் வேலைநிறுத்தம், ரயில்வே தொழிலாளர்களின் வேலைநிறுத்தம். அந்த நாட்டவர்கள் யுத்தத்தையிட்டு வெறுத்துப் போயிருக்கிறார்கள். அவர்கள் (அமெரிக்கா, ஐரோப்பா) உக்ரைனில் உள்ள பொம்மை ஆட்சிக்கு – வங்குரோத்து மற்றும் ஊழல் ஆட்சிக்கு – நிறைய பணம் செலவிடுகிறார்கள்.

மேற்குலகம் தற்போது மத்திய கிழக்கு நெருக்கடி போன்ற பிற பிரச்சினைகளில் மூழ்கியுள்ளது. ஓம், இது ஒரு நெருக்கடி. முக்கிய பிரச்சினை என்னவென்றால், பலஸ்தீனியர்கள் பல தசாப்தங்களாக தங்கள் சொந்த நாட்டைப் பெறுவதற்கான வாய்ப்பை இழந்து போயுள்ளனர்.

கிழக்கு ஜெருசலேமைத் தலைநகராகக் கொண்ட 1967 ஆம் ஆண்டின் எல்லைகளுக்குள் கட்டாயமாக அவர்கள் தங்கள் சொந்த நாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அதனை அவர்கள் இழந்துள்ளனர். அங்குதான் மோதலின் வேர்கள் உள்ளன.

# மீண்டும் தொடங்கியது விவசாயிகளின் டெல்லி சலோ போராட்டம்!



கடந்த 2020 ஆம் ஆண்டின் இறுதியில் மூன்று வேளாண்மைச் சட்டங்களுக்கு எதிரான விவசாயிகளின் டெல்லி முற்றுகை (டெல்லி சலோ) போராட்டமானது தொடங்கியது. பாசிச மோடி அரசின் பல்வேறு அடக்குமுறைகளையும் மீறி 700 இற்கும் மேற்பட்ட விவசாயிகளின் உயிர்த்தியாகத்தால் ஓர் ஆண்டிற்கும் மேலாக நீடித்து மோடி அரசை அடிப்பணிய வைத்து மூன்று வேளாண் சட்டங்களை தற்காலிகமாக பின்வாங்க வைத்தது.

குறைந்தபட்ச ஆதார விலையை சட்டப்பூர்வமாக்குவது, மின்சார சட்டத் திருத்த மசோதாவை திரும்பப் பெறுவது, விவசாயிகள் மீது போடப்பட்ட பொய் வழக்குகளை திரும்பப் பெறுவது உள்ளிட்ட பல கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக மோடி அரசு ஏற்றிருந்தது. ஆனால் அவை ஏதும் நிறைவேற்றப்படாததால், கடந்த இரண்டு ஆண்டுகளாக பல கட்டப் போராட்டங்களை நடத்தி வந்த விவசாய சங்கங்கள், தற்போது பெப்ரவரி 13 ஆம் திகதியன்று மீண்டும் டெல்லி சலோ போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

நாடு முழுவதிலிருந்து சம்யுக்தா கிசான் மோர்ச்சா (அரசியல் சாராதது), கிசான் மஸ்தூர் மோர்ச்சா ஆகிய விவசாய அமைப்புகளின் தலைமையிலான 200 இற்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் டெல்லி முற்றுகை போராட்டத்தில் பங்கேற்கின்றனர். இப்போராட்டத்தில் மேலும் பல விவசாய சங்கங்களும் பங்கேற்பதாக தெரிவித்துள்ளனர். பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், பீகார், கேரளா, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

தங்களுடைய கோரிக்கைகளை மோடி அரசு நிறைவேற்றும் வரை போராட்டத்தை தொடர விவசாயிகள் திட்டமிட்டு உள்ளதாகவும், இதற்காக பலமுறை டிராக்டர்களுடன் ஒத்திகை பார்த்ததாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் விவசாயிகள் போராட்டத்தை அறிவித்துள்ளதால் பீதியடைந்த மோடி அரசானது, சண்டிகரில் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளுடன் ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல், ஒன்றிய இணை அமைச்சர்கள் நித்யானந்த் ராய், அர்ஜூன் முண்டா மற்றும் பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான் ஆகியோரை வைத்து பேச்சுவார்த்தைகளை நடத்தியது. ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தன.

**கார்த்திக்**

பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்ததைத் தொடர்ந்து பஞ்சாப்பின் ஃபதேகர் சாஹேப்பில் இருந்து விவசாயிகளின் டெல்லி சலோ பேரணி 13.02.2023 அன்று தொடங்கியது.

இந்திய ஒன்றிய அரசு விவசாயிகளின் கோரிக்கைகளை பரிசீலிப்பதாக கூறினாலும், தங்களுடைய போராட்ட அனுபவத்தில் இருந்து மோடி அரசை சரியாக புரிந்துவைத்துள்ள விவசாயிகள், கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே போராட்டத்தை கைவிடுவோம் என்று தெரிவித்துள்ளனர்.

கடந்த எட்டாம் திகதி ஒன்றிய அரசு விவசாயிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, "எங்களது 10 அம்ச கோரிக்கைகளை சுட்டிக்காட்டி நாங்கள் பேசினோம். அதை அரசு பரீசிலீக்கும் என ஒன்றிய அமைச்சர்கள் தெரிவித்தனர்" என்றும் "டெல்லி நோக்கிய பேரணி திட்டத்தில் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதற்குள் அரசு அதற்கு தீர்வு கண்டால் சிறப்பு" என்று செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கிசான் மஸ்தூர் சங்கர்ஷ் கமிட்டியின் பொதுச் செயலாளர் சர்வான் சிங் பாந்தர் தெரிவித்துள்ளதே அதற்கு சான்றாகும்.

விவசாயிகளின் டெல்லி முற்றுகை போராட்டத்தை பேச்சுவார்த்தையின் மூலம் தடுத்து நிறுத்த முடியாததால்,

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**